இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
ilakku.org
SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 291 | சனி, ஜூன் 15, 2024 | 16 பக்கங்கள்


# ரணிலின் அடுத்த நகர்வு என்ன?

அகிலன்





# தமிழ் பொது வேட்பாளர் ஒரு கோமாளிக்கூத்தா?

யாழ். பல்கலைக்கழக அரசியல்துறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கம்

# தங்கள் இறைமை பாதுகாப்பாக ஐரோப்பிய தேசிய மீட்டுருவாக்கத்தை ஐரோப்பிய ஒன்றியத் தேர்தலால் ஐரோப்பியர் உறுதிப்படுத்தினர்

**ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமைக்குப் பாதுகாப்பாகச் செய்யப்பட்ட 1977 இன் தேசிய மீட்டுருவாக்கத்தை ஐரோப்பியர் ஏற்க வைக்க வேண்டும்.**

ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்


info@ilakku.org
© 2024 இலக்கு இணையம்

# காணி, பொலிஸ் அதிகாரம் வழங்க முயன்றால் வீதியில் இறங்கி இரத்தம் சிந்தித் தடுப்போம்

## எச்சரிக்கிறார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா



13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு எவராவது முயன்றால் வீதிக்கு இறங்குவோம் என்பதுடன், இரத்தம் சிந்தியாவது நாட்டை பாதுகாப்போம் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப் பொன்றை நடத்திய அவர் இதனை தெரிவித்துள்ளார்.

"வடக்கிற்கு சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் 13ஆவது திருத்தத்தை வழங்குவதாக கூறு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# உலகில் 117 மில்லியன் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர் – ஐ.நா

உலகில் 117.3 மில்லியன் மக்கள் அதாவது 69 மக்களில் ஒருவர் என்ற விகிதத்தில் பலவந்தமாக இடம்பெயர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.



போர்கள், மோதல்கள் உள்நாட்டு கலவரங்கள், மனித உரிமை மீறல்கள், வன்முறைகள் என்பனவே இந்த பலவந்த வெளியேற்றத்திற்கான காரணங்கள் என ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பின் தலைவர் பிலிப்போ கிராண்டி கடந்த வியாழக்கிழமை(13) தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் அதிக மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கடந்த ஏப்பிரல் மாதம் அது 120 மில்லியனாக உயர்ந்திருந்தது. 68.3 மில்லியன் மக்கள் உள்நாடுகளில் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். இந்த நிலமையை கட்டுப்படுத்த அனைத்துலக சமூகம் முன் வர வேண்டும். இஸ்ரேலின் தொடர் தாக்குதல்களால் காசா பகுதியில் வாழும் மக்களின் 75 விகித மானவர்கள் இடம் பெயர்ந் துள்ளனர். இது 1.7 மில்லியன் மக்கள் தொகையாகும்.


தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஊடகவியலாளர் இல்லம் மீதான தாக்குதல்

## நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணை

யாழ். அச்சுவேலியில் ஊடகவியலாளரின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் புகுந்து உடைமைகளுக்குத் தீ வைத்து வன்முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்பின் பிரகாரம் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் கீழ் நான்கு பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோயில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில்



இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியது.


இதன்போது வீட்டுக்கு வெளியே இருந்த மோட்டார்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஹூதீஸ் அமைப்பினரின் தாக்குதலில் மற்றுமொரு கப்பல் கடும் சேதம்

ஆளில்லாத தாக்குதல் படகுகள் மூலம் ஹூதீஸ் அமைப்பினர் செங்கடல் பகுதியில் கடந்த புதன்கிழமை(12) மேற்கொண்ட தாக்குதலில் கிறீக் நாட்டுக்கு சொந்தமான சரக்குக் கப்பல் ஒன்று கடுமையாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலிற்குள் நீர் புகுந்துள்ளதால் கப்பல் விரைவில் கடலில் மூழ்கும் சாத்தியங்கள் உள்ளதால் அதில் உள்ளவர்களை



மீட்கும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பொது வேட்பாளராக களமிறங்குகின்றேன்

## பகிரங்கமாக அறிவித்தார் அனந்தி சசிதரன்



ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்கும் விடயத்தை அவர் தெரிவித்தார்.

வடக்கு,கிழக்கு தமிழர் தாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இம்முறை தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டுமென வடக்கு, கிழக்கு தமிழ் சிவில் அமைப்புகளின் தலைமையில் கடந்த காலத்தில் பல் வேறு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

சிவில் அமைப்புகள் தலைமையில் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# சீனாவும் இந்தியாவும் இணைந்து செயற்பட ஆர்வம்

இந்தியாவுடன் நல்லுறவுகளை வளர்த்துக்கொள்ள சீனா விரும்புவதாக இந்தியாவுக்குகான சீன தூதுவர் துதரகத்தின் பேச் சாளர் கடந்த புதன்கிழமை(12) தெரிவித்துள்ளார்.



இந்தியாவில் இடம்பெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற பாரதிய ஜனதா கட்சயின் கூட்டணி பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மூன்றாவது முறையாக ஆட்சிய அமைத்துள்ள நிலையில் தாம் பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் நல்லுறவுகளை பேண விரும்புவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெயசங்கர் தெரிவித்திருந்த நிலையில் சீன

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இந்தியாவின் ஆந்திர மாநில முதல்வராக சந்திரபாபு நாயுடு



தெலுங்கு தேசம் கட்சியின் தலைவரான சந்திரபாபு நாயுடு நான்காவது முறையாக ஆந்திரா மாநிலத்தின் முதல்வராக பதவியேற்றுள்ளார். நாயுடுவின் பதவியேற்பு விழா விஜயவாடா அருகே பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி, அமித் ஷா, ஜெ.பி.நட்டா, நிதின் கட்கரி, ரஜினிகாந்த், சிரஞ்சீவி, ஓ.பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஜனசேனா கட்சித்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இஸ்ரேலும் ஹமாசும் போர்க்குற்றங்களை மேற்கொண்டுள்ளனர் – ஐ.நா

கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் நாளில் இருந்து இஸ்ரேலிய அரசு காசா பகுதி மீதும் பாலஸ்தீன பகுதிகள் மீதும் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் அதிக போர்க்குற்றங்களை மேற்கொண்டு வருகின்றது. அதே போல ஹமாஸ் அமைப்பினரும் இஸ்ரேலின் மீதான தாக்குதல்களில் போர்க்குற்றங்களை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின்சுயாதீனவிசாரணைகளில்



தெரிய வந்துள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அமைக்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்து தமிழரசுக் கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை

### மாவை சேனாதிராஜா



*"தமிழ் பொது வேட்பாளர் விடயம் குறித்து இலங்கை தமிழ் அரசுக் கட்சி இன்னும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. தெற்கின் பிரதான கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களைப் பார்வையிட்ட பின்னரே அது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். சிலர் தமது தனிப்பட்ட கருத்துகளை வெளியிட்டாலும் அது எமது கட்சியின் முடிவல்ல" என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்திருக்கிறார்.*

*தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடு குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,*

*தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்து தெற்கிலுள்ள பிரதான கட்சிகளிடம் நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக்கூறி வருகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார ஆகியோர் எங்களை சந்தித்து இப்போது பேசியிருக்கிறார்கள். அவர்களிடம் நாம் சில விடயங்களை அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறோம்.*

*தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி இதுவரையும் எந்த விதமான முடிவையும் எடுக்கவில்லை. இப்போது அதன் தலைவர் என்ற ரீதியில் நான்அதை பொறுப்புடன்கூறுகிறேன். எங்களை சந்தித்த தெற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் நாம் சில கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறோம். சமஷ்டி கட்டமைப்பு முறையில் ஓர் அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டு வந்து ஒரு முழுமையான அதிகாரப் பகிர்வை வழங்கும் தீர்வு திட்டத்தை உங்களுடைய தேர்தல் அறிக்கைகளில் எந்தவித ஒளிவுமறைவு மின்றி வெளிப்படையாக - தெளிவாக முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறோம். அந்த அதிகாரப் பகிர்வு முறை எப்படி இருக்க வேண்டும் என்பதையும் அவர்களுக்கு விளங்கப் படுத்தியிருக்கிறோம்.*

*அவர்கள் இது குறித்து எங்களுக்கு இதுவரை எந்த உறுதிமொழியையும் வழங்கவில்லை. ஆனால், இந்த விடயத்தில் நாங்கள் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்பதையும் அவர்களுக்குக் கூறியிருக்கிறோம். நாங்கள் குறிப்பிட்ட விடயங்களை உங்களின் அறிக்கைகளில் முதலில் முன்வையுங்கள் என்று கூறியிருக்கிறோம். ஆகவே, அவர்களின் அறிக்கைகள் வெளியாகிய பின்னர்தான் தமிழ் அ ன் தமிழ் அரசு கட்சி ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் அதுவரை நாம் எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளப்போவதில்லை.*

*எங்களுடைய மத்திய குழுவிலே முன்னரும் இதுபற்றி பேசியிருக்கிறோம். எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மத்திய குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயவிருக்கிறோம். தேவை ஏற்பட்டால் பொதுச் சபையை கூட்டி ஆராய்வதற்கும் நாம் ஆயத்தமாக இருக்கிறோம். இதுதான் தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடு" என்றும் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்*

## ஈழத்தமிழரின் இறைமையை உள்வாங்க சிங்களத் தலைமைகளின் யாழ்ப்பாணப் படையெடுப்பு

சிறிலங்காவில் இவ்வாண்டு நடைபெற வேண்டிய நிலையில் உள்ள சிறிலங்கா ஜனாதிபதி தேர்தல் என்பது 1978 முதல் நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல். இத் தேர்தலைத் எப்படி எதிர்கொள்வது என ஈழத்தமிழ் அரசியல்வாதிகளிடை பலத்த போட்டி. போட்டியின் வேகத்தில் ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றுப் பரிணாமத்தையே முடக்குகிற கருத்துக்கள் செயற்பாடுகள் ஈழத்தமிழரிடையே படுவேகம் பெறுகிறது. அவைகளை எல்லாம் இங்கு மீள்பதிவு செய்யாது ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றின் பரிணாம வளர்ச்சியின் முக்கிய கூறுகளை மீள்பதிவு செய்வது ஈழத்தமிழர்களுக்குக் குறிப்பாக இளையவர்களுக்கு தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் திட்டமிட உதவும் என்பது இவ்வார இலக்கின் எண்ணமாகவுள்ளது.

பிரித்தானியக் காலனித்துவ அரசினால் கைப்பற்றப்பட்டிருந்த ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிங்களவர்களின் இறைமையுடன் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமையுள் பகிர்வதற்கு பிரித்தானிய காலனித்துவ அரசினால் விதந்துரைக்கப்பட்ட சோல்பரி அரசியல் அமைப்பின் 29(2) விதியை மீறி தன்னிச்சையாக மரபுவழிப் பாராளுமன்றக் கட்டிடத்துக்கு வெளியே நவரங்கலாவில் சிறிலங்காவின் ஈழத்தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு உறுப்பினர்களின் பங்கேற்பு இல்லாது தன்னிச்சையாக இயற்றப்பட்ட 22.05.1972ம் திகதிய சிங்கள பௌத்த சிறிலங்கா குடியரசின் அரசியல் சட்டம் ஈழத்தமிழர்களை அரசற்ற தேசஇனமாக்கியது (Nation Without State). இந்த அரசியல் சாசனத்தை அடிமைச்சாசனமென ஏற்க மறுத்து யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள நாவலர் வளாகத்தில் கிழித்து எறிந்து தீவைத்து, காங்கேசன்துறைச் சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்புரிமையை விட்டு விலகி, அத்தேர்தலை ஈழத்தமிழர்களின் அடையாளக் குடியொப்பமாக்கி 1975இல் அதில் பெற்ற அறுதிப் பெரும்பான்மையின் அடிப்படையில் அக்கால ஈழத்தமிழர்களின் தலைவர் சா.ஜே. வே. செல்வநாயகம் சிறிலங்காப் பாராளுமன்றத்துள் தனியாட்சி உரிமைப் பிரகடனத்தை அனைத்துலகச் சட்ட முறைமைகளுக்கு ஏற்ப சனநாயக வழியில் பிரகடனப்படுத்திச் சிறிலங்காப் பாராளுமன்ற ஆட்சியில் இருந்து விலகி ஈழத்தமிழர்களின் தன்னாட்சிப் பிரகடனத்தைச் செய்தார். அந்தப் பிரகடனம் "வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகக் காலனித்துவ காலம் வரை இலங்கைத் தீவில் ஈழத்தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சமமான தனித்தனியான இறைமையுள்ள மக்களாக வாழ்ந்து வந்தனர். காலனித்துவத்தில் இருந்து சுதந்திரத்திற்கான போராட்டத்தில் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய சுதந்திரத்தை மீளப்பெறுவோம் என்ற முழுநம்பிக்கையுடனேயே முன்னணியில் நின்று போராடினர். கடந்த 25 ஆண்டுகாலத்தில் ஒன்றுபட்ட இலங்கையுள் சிங்களவர்களுக்குச் சமமானவர்கள் என்ற அடிப்படையில் எங்களுடைய அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் செய்துள்ளோம். துக்கமான உண்மை என்னவென்றால் தொடர்ந்து வந்த சிங்கள அரசாங்கங்கள் பிரித்தானிய காலனித்துவ அரசு வழங்கிய சுதந்திரத்தால் கிடைத்த அதிகாரப் பெருக்கைப் பயன்படுத்தி எங்களது அடிப்படை மனித உரிமைகளை மறுத்து எங்களை இரண்டாந்தர குடிகளாக்கி அடிமைப்படுத்தியுள்ளனர். தமிழர்களுடைய இறைமையையும் சிங்களவரின் இறைமையையும் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் இருவருக்கும் பொதுவான இறைமையாக்கியதைப் பயன்படுத்தியே சிங்களவர்களால் தமிழர்களை அடிமைப்படுத்த முடிந்தது. நான் உலகத்துக்கும் எனது மக்களுக்கும், இந்தத் தேர்தலில் தமிழீழ மக்கள் அவர்களிடம் உள்ள அவர்களது இறைமையைப் பயன்படுத்தி எனக்கு அளித்த தீர்ப்பாக தமிழ் ஈழ மக்கள் விடுதலை பெற்ற மக்களாகின்றார்கள் என்பதை அறிவிக்கின்றேன். தமிழர் கூட்டணியின் சார்பாக நாங்கள் இந்த மக்கள் ஆணையை முன்னெடுப்போம் என முழுமையாக பிரகடனப்படுத்துகின்றேன்." என்பதாக அமைந்தது ஈழத்தமிழர் வரலாறு.

இந்தத்தன்னாட்சிப் பிரகடனமே 14.05.1976 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநாடு பண்ணாகமத்தில் நடந்த பொழுது வட்டுக்கோட்டைத் தீர்மானமாக அந்த மாநாட்டில் கலந்து கொண்ட முக்கிய தமிழ்க்கட்சிகள் அனைத்தாலும் ஏற்கப்பட்டு ஈழத்தமிழர்களின் அரசியல் கொள்கையாக்கப்பட்டு 1977 இல் மக்கள் குடியொப்பத்தின் மூலம் ஈழத்தமிழர்களின் அரசியல் கோட்பாடாக உலகுக்குத் தெளிவாக்கப்பட்டது. அத்துடன் 1977ம் ஆண்டின் தேர்தல் கொள்கைத் திரட்டு மிகத் தெளிவாக 'இலங்கையின் தேசிய அரச சபைக்குத் தெரிவு செய்யப்படும் தமிழ் உறுப்பினர்கள் தங்களைத் தமிழீழ தேசிய சபை உறுப்பினர்களாகக் கட்டமைத்து தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பை உருவாக்கி அதனை அமைதியான முறையிலோ அல்லது நேரடிச் செயற்பாடுகள் மூலமோ அல்லது போராட்டத்தாலோ தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை நிறுவுவர்' எனவும் விளக்கி அதற்கான மக்களாணையும் 1977 பொதுத்தேர்தலைக் குடியொப்பமாக மாற்றியதன் மூலம் பெறப்பட்டது. இந்த வரலாற்றுப் பரிணாமத்தில் 1978 முதல் 2009 வரை தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிளை பிரபாகரன் தலைமையில் தமிழ் ஈழ நடைமுறையரசு இலங்கைத்தீவில் இரு அரசுக்கள் என்ற அதன் வரலாற்று நிலையில் செயற்பட்டதும் அதனைச் சிறிலங்கா 2009 இல் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு படையெடுப்பு மூலம் தமிழ் ஈழத் தேசமக்களையும் தேசத்தின் உட்கட்டுமானங்களையும் செயலிழக்கச் செய்தது. இதன்வழி நடைமுறையில் மீளவும் படைபலத்தால் ஈழத்தமிழர்களின் அரசியல் பணிவைப் பெறும் ஆக்கிரமிப்பு அரசாகவே கடந்த 15 ஆண்டுகளாகச் சிறிலங்கா ஆட்சி தொடர்கிறது. இந்த ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றுப் பரிணாமத்தைத் திசை திருப்புவதற்கான சிங்களக் கட்சிகளின் தலைமைகளின் படையெடுப்பு வடக்கில் வேகமாகியுள்ளது. இந்நேரத்தில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் உண்மை வரலாற்றைப் பேசவைக்கவே இந்த ஈழத்தமிழரின் அரசியல் பரிணாமவரலாறு சுருக்கமாகப் பதியப்பட்டது. ஈழத்தமிழர்களுக்கு எனத் தனியான இறைமை இல்லையென்று ஈழத்தமிழர்களைக் கொண்டே அரசியல்படுத்தலும் ஈழத்தமிழர்கள் சிறிலங்காவின் ஆட்சிக்குள் தமக்கான தீர்வுகளைப் பெறும் விருப்புள்ளவர்கள் என்பதால் அவர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்கிறது என்பதால் எந்த அனைத்துலக நாடோ அல்லது அமைப்புக்களோ ஈழத்தமிழர்களின் வெளியகத்தன்னாட்சி உரிமையினை ஏற்க இயலாது என ஈழத்தமிழரைக் கொண்டே அவர்களைத் தேர்தலின் முக்கிய பங்காளராக்கி உலகுக்கு வெளிப்படுத்தலும் என்கின்ற இரு இலக்குகளில் சிங்கள தேசத்தின் பொருளாதார உறுதிக்கான தேர்தல்களைக் கூட ஒரு நாடு அது சிங்கள நாடு ஒரு சட்டம் அது பௌத்த சட்டம் என்கிற தன்மைக்குள் ஈழத்தமிழர்களையும் உள்வாங்கி ஈழத்தமிழரின் இறைமையை அவர்களைக் கொண்டே இழக்கவைக்கும் உத்திகளில் அனைத்து சிங்களத் தலைமைகளும் யாழ்ப்பாணத்தினை நோக்கி அரசியல் படையெடுப்பில் இறங்கியுள்ளனர். வடக்கு கிழக்கு சமுகங்களின் பிரச்சனை என்ற சொல்லாட்சி, பொருளாதாரம் சிறந்தால் எல்லாம் சரியாகும் என்று நம்பிக்கையளித்தல். 13ஐ வைத்து இந்தியாவையும் ஈழத்தமிழரையும் ஒருங்கே மயக்கும் பேச்சுக்கள். மக்களிடை நம்பிக்கை வந்தால் தான் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தலாம் என்று நிபந்தனைகள் 13ஐ மறுத்தவர்கள் நாங்கள் என்றாலும் ஈழத்தமிழர் விரும்புகிறார்கள் என்பதால் தற்காலிகமாக நடைமுறைப்படுத்தவோம் என்னும் வலைவீச்சுக்கள். இந்நிலையில் ஈழத்தமிழர் தங்கள் இறைமையைத் தேர்தல் களத்தில் பேச இயலாதவாறு அரசியல் அமைப்பின் ஆறாவது சட்டம். இறைமையுடன் சனநாயகப் பங்களிப்புச் செய்யவியலாதவாறு பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம். இத்தனைக்கும் மேலாகத் தாங்கள் நினைத்ததைச் செய்யும் பொலிசாரின் அட்டகாசம். இவற்றுக்கு நடுவில் ஈழத்தமிழர்கள் பொதுவேட்பாளரை முன்னிறுத்தி தங்கள் அரசியல் விருப்பை வெளிப்படுத்தவும் பகிஸ்கரித்துத் தங்கள் அரசியல் விருப்பை வெளிப்படுத்தவும் முயற்சிக்கின்றனர். இருவரின் அணுகுமுறைகளும் வேறாயினும் நோக்கில் ஈழத்தமிழரின் அரசியல் விருப்பை வெளிப்படுத்தல் என்ற பொதுத்தன்மை உண்டு. இருவழிகளிலும் முயற்சியுங்கள். மக்கள் ஒன்றுபட்டு தலைமைகளை ஒன்றுபடுத்த வேண்டும் என்னும் மக்களின் விழிப்புணர்ச்சி உச்சமாகும் என்பது இலக்கின் இவ்வார எண்ணம்.

**ஆசிரியர்**

# ரணிலின் அடுத்த நகர்வு என்ன?



அகிலன்

கொழும்பில் தன்னுடைய தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தனவின் முயற்சியால்தான் இந்த அலுவலகம் திறக்கப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் இரண்டு செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றது. முதலாவது, ஜனாதிபதித் தேர்தலுக்கு ரணில் தயாராகின்றார் என்பது. இரண்டாவது, தனியான ஒரு தேர்தல் அலுவலகத்தைத் திறந்திருப்பதன்மூலம் ஐ.தே.க. சார்பில் ரணில் போட்டியிடப்போவதில்லை என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது ஒரு சுயாதீக வேட்பாளராகவே அவர் களமிறங்கப்போகின்றார்.

அது அவ்வாறிருந்தாலும், “தேர்தல்கள் பின்போடப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று சொல்லிவிட முடியாது” என்பதுதான் எதிர்க் கட்சிகளின் கருத்தாக இருக்கின்றது. அவர்கள் இவ்வாறு கூறுவதற்கு இரண்டு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.



முதலாவது, ஐ.தே.க. பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிவிப்பு. “ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் இரண்டு வருடங்களுக்கு பின்போடப்பட வேண்டும்” என்ற கருத்தை அவர் முன்வைத்தார். “தற்போதைய பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வந்து சுமூகமான ஒரு நிலை ஏற்பட்ட பின்னர் தேர்தல்களை நடத்துவதே நாட்டுக்கு நல்லது” என்றவகையில் இதற்கு அவர் விளக்கமும் கொடுத்திருந்தார்.

ஐ.தே.க.வைப் பொறுத்தவரையில் பொதுச் செயலாளர் பதவி என்பது சக்தி மிக்கது. முக்கியமான – பொறுப்பான பதவியும் கூட. இவ்வாறான பதவி ஒன்றில் இருப்பவர் எழுந்தமானமாக – பொறுப்பற்ற வகையில் இவ்வாறான ஒரு கருத்தை வெளியிடுவார் என எதிர்பார்க்க முடியாது. தேர்தல்களைஒத்திவைப்பது தொடர்பில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் மற்றும் மக்களுடைய பிரதிபலிப்பு எவ்வாறானதாக இருக்கின்றது என்பதை அறிந்துகொள்வது - நாடி பிடித்துப் பார்ப்பது இதன் நோக்கமாக இருந்திருக்கலாம்.

இரண்டாவது காரணம், அரசியலமைப்பை மீறாமல் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக அரச உயர் மட்டம் சட்ட - அரசியலமைப்பு நிபுணர்களுடன் ஆராய்ந்து கொண்டிருப்பதாக வெளிவந்திருக்கும் தகவல்கள். 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள். 2015 இல் மைத்திரி - ரணில் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தத்தின்படி இது ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டது. இந்தத் திருத்தம் மக்கள் கருத்துக் கணிப்புக்குச் செல்லவில்லை. அதனால், ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறுவருடங்களாக இருக்கலாம் என அரசியலமைப்பு வல்லுனர்கள் சிலர் குறிப்பிடுகின்றார்கள். இது தொடர்பில் சட்டமா அதிபருடைய ஆலோசனை பெறப்படலாம் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன.

அரசியலமைப்பில் உள்ள இந்தத் தவறைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக்காலத்தை இன்னொரு வருடத்துக்கு நீடிப்பதற்கு முயற்சிக்கலாம் என்ற கருத்து தற்போது அரசியல் களத்தைச் சூடாக்கியுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தைக் குறைப்பது என்பது மக்களுடைய இறைமையைப் பாதிப்பதாக அமையாது என்பதால், அதனை சர்வஜய வாக்கெடுப்புக்கு உட்படுத் தத் தேவையில்லை என்ற கருத்து ஒன்றும் முன் வைக்கப்படுகின்றது. ஆனால், ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பது மக்களின் இறைமையைப் பாதிப்பதாக அமையும் என்பதால்தான், அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அரசியலமைப்புச் சிக்கல் குறித்த வாதப் பிரதிவாதங்கள் அடுத்துவரும் வாரங்களிலும் தொடரும். ஆனால், தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக இதுவரையில் உத்தியோகபுர்வமாக அறிவிக்காமல் மௌனம் காக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணத்தில் எவ்வாறான உபாயம் இருக்கின்றது என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும். ஆனால், அவர் தன்கு இருக்கக்கூடிய அனைத்து கதவுகளையும் திறந்துவைத்திருப்பார் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான களத்தைத் தயார்படுத்துவதற்கான வேலைகளை அவர் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார். அதேவேளையில், தனது கட்சியினரையும் தனது எதிராளிகளையும் குழப்பத்திலேயே அவர் வைத்திருக்கின்றார். தனது முடிவுக்கு சாதகமா ன கள நிலையை உருவாக்கிவிட்டு, அவர் திடீரென காய்களை நகர்த்தி எதிராளிகளைத் திகைக்க வைப்பார் என்று எதிர்பார்க்கலாம்.



19 ஆவது திருத்தம் அரசியலமைப்பில் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. அப்போதைய மைத்திரி - ரணில் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல விரும்பாததால் அந்த சர்ச்சை தீர்க்கப்படாததாகவே இருக்கின்றது. அரசியலமைப்பில் உள்ள இந்த சர்ச்சை குறித்து தகவல்கள் கடந்த வாரம் வெளியானதையடுத்து, அரசாங்க உயர்மட்டத்திலும் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. அரசியலமைப்பில் உள்ள இந்த தவறைப் பயன்படுத்தி தற்போதைய ஜனாதிபதி தனது பதவிக்காலத்தை சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்குச் செல்லாமலேயே ஒரு வருடத்துக்கு நீடிக்க முடியும்.

**அரசியலமைப்பில் காணப்படும் இந்தக் குறைபாட்டுக்கு காரணம் என்ன?**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஜயம்பதி விக்கிரமரட்ண இதற்கான காரணத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார். 19 ஆவது திருத்தத்தை வரைந்த சட்டநிபுணர் குழுவில் அவரும் ஒருவர். “19 ஆவது திருத்தம் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாமல், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்” என்று அப்போதைய அரசாங்கம் அறிவுறுத்தியது” என்று அவர் நேற்றைய தினம் தெரிவித்திருந்தார்.

“அரசாங்கத்துக்கும் இந்த அரசியலமைப்பு குழறுபடி தெரிந்தே இருந்தது. ஆனால், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் கொடுத்த வாக்குறுதியின்படி 19 ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள் என்றும் ஜயம்பதி தெரிவித்தார்.

19ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகக் குறைத்து அரசியல் சாசனம் திருத்தப்பட்டாலும் கூட ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 6 ஆண்டுகளுக்கு மேல் நீட்டிக்க நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கின் ஒப்புதலும் வாக்கெடுப்பும் தேவை என்று 83 (ஏ) சரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தற்போது அரசாங்கத்தின் அரசியலமைப்பில் ஐந்து ஆண்டுகள் ஆகும், எனினும், உறுப்புரை 83, (ஏ) இல் ஒரு சட்டத்தை உருவாக்குவதற்கான காலத்தை ஒத்திவைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி, ஜனாதிபதி பதவிக்கு 6 ஆண்டுகளுக்கு மேல் வகிக்க, நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கின்ஒப்புதலைப்பெற்றுவாக்கெடுப்பு நடத்துவது அவசியம் ஒரு சிலர் கூறுகின்றார்கள். ஆனால், சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

ஒக்ரோபரில் நடைபெறக்கூடிய தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்களை ரணில் ஆராய்வார். மக்களின் ஆதரவுடன் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதுதான் அவரது முதலாவது தெரிவாக இருக்கும். அதில் அவர் திருப்தியடையவில்லையாயின் மற்றொரு தெரிவை நோக்கி செல்வது அவருக்குத் தவிர்க்கமுடியாததாகலாம். அந்த விடயத்தில் நாடாளுமன்றம் அவருக்கு சாதகமாகவே இருக்கும். அதாவது மூன்றில்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# தமிழ் பொது வேட்பாளர் ஒரு கோமாளிக்கூத்தா?

**ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் பிரதான வேட்பாளர்கள் அனைவருமே வாக்குறுதிகளுடன் யாழ்ப்பாணம் வரத் தொடங்கியுள்ளார்கள். இந்த நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தமிழர் தரப்பில் பேசு பொருளாகியிருக்கின்றது. இவை தொடர்பில் யாழ். பல்கலைக்கழக அரசியல்துறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கம் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் மூவருமே அடுத்தடுத்து யாழ்ப்பாணம் வருகிறார்கள். முக்கிய சந்திப்புக்களை மேற்கொள்கிறார்கள். வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள். இவற்றை நீங்கள் எவ்வாறு பார்க் கின்றீர்கள்?**

இதில் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் மூன்று.

முதலாவதாக, தென்னிலங்கையில் இந்த மூன்று வேட்பாளர்களுக்கும் இடையில் கடுமையான போட்டி இம்முறை இருக்கிறது. அதனால், வடக்கு கிழக்கு மக்களுடைய வாக்குகளைப் பெற வேண்டிய தேவை இந்த மூன்று வேட்பாளர்களுக்கும் ஒரு அடிப்படை அம்சமாக இருக்கின்றது.

இரண்டாவதாக, அவர்களுடைய வாக்குறுதிகள், தமிழ்க் கட்சிகளுடன் அவர்கள் உரையாடும் விடயங்களைப் பொறுத்தவரையில் 13 என்ற விடயத்தைத்தான் அவர்கள் பிரதானமாகப் பேசுகின்றார்கள். இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயம் ஒன்றுள்ளது. இந்த 13 என்பது அரசியலமைப்பில் உள்ள ஒரு விடயம். இதனை ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒரு பிரகடனமாக வெளிப்படுத்துவது என்பது ஒரு அபத்தமான அரசியல் கலாசாரம்.

அதேவேளை, சமஷ்யை தேர்தல் விஞ்ஞானங்களில் வெளிப்படுத்தும் தமிழ்க் கட்சிகள் மாகாண சபைகளைக் கோருவது, அதற்கான தேர்தலை நடத்துமாறு கேட்பது, 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோருவது எல்லாம் மோசமான அரசியல் அணுகுமுறையாகவே கருதப்பட வேண்டும்.

**யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மூன்று பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுமே இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும், 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றார்கள். இதனை தமிழ்த் தரப்புக்கள் சாதகமாகப் பயன்படுத்த முடியாதா?**

இதில் முக்கியமான ஒரு புரிதல் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. அவர்களைப் பொறுத்தவரையில் எத்தனையோ பேச்சுவார்த்தைகள், எத்தனையோ உத்தரவாதங்கள் அனைத்தையும் தமிழ் மக்கள் பல காலப்பகுதிகளில் சந்தித்திருக்கின்றார்கள். அதனால், இந்தத் தீவுக்குள் இனநெருக்கடிக்கான தீர்வைக் காண்பது சாத்தியமற்றது என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். இனப்பிரச்சினை என்பது ஒரு சர்வதேசப் பிரச்சினை என்பதுதான் அதன் அடிப்படை. நிச்சயமாக ஒரு பிராந்தியத் தளத்தில் நாட்டின் எல்லைக்கு வெளியேதான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற சூழ்நிலை எழுந்திருக்கின்றது.

கடந்த காலங்களில் பதவிக்கு வந்தவர்கள் தமது உத்தரவாதங்களை கைவிட்டுச் சென்றமைதான் இதற்குக் காரணம். இனப் பிரச்சினை என ஒன்றுள்ளது என இவர்கள் இப்போதுதான் பேச்சுக்களை ஆரம்பிக்கின்றார்கள். இவர்களுடைய இந்த அணுகுமுறை குறித்த புரிந்துணர்வு எமது மக்களிடம் இருக்கியது என்பதுதான் என்னுடைய அவதானிப்பு.

**கடந்த காலங்களில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது, இம்முறை சிங்க இனவாதம் முதன்மைப்படுத்தப்படும் ஒரு நிலையைக் காணமுடியவில்லை என்ற கருத்து ஒன்றுள்ளது. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

அதனை நோக்கி இந்தத் தேர்தல் களம் இதுவரையில் விரிவாக்கம் பெறவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இப்போதும் அதற்கான ஒரு களம் தோற்றுவிக்கப்படும். உதாரணமாக, தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது 13 ஆவது திருத்தம் தொடர்பில் சஜித் பிரேமதாஸ தெரிவித்த கருத்துக்களையிட்டு, தென்னிலங்கையில் உருவாகியிருக்கும் எதிர்ப்புக் காளல் அவர் தனது நிலைப்பாட்டிலிருந்து பின் வாங்கும் ஒரு நிலை ஏற்படலாம். இது குறித்த சில செய்திகளும் வெளிவந்திருக்கின்றன.

தேர்தல் களம் விரிவடையும்போது இவ்வாறான நிலையையை நோக்கிச் செல்ல வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இந்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஏற்படும். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்க முன்வருகின்ற எந்த வேட்பாளரும் தோற்கடிக்கப்படுகின்ற ஒரு நிலை தென்னிலங்கையில் இருந்திருக்கின்றது. அதனால், அது குறித்த ஒரு எச்சரிக்கை இந்த மூன்று வேட்பாளர்களிடமும் இருக்கும்.

ஆனால், ஒப்பீட்டு அடிப்படையில் இனவாதம் முதன்மைப்படுத்தப்படும் ஒரு நிலை இதுவரையில் உருவாகாத ஒரு நிலை இருக்கின்றது என்பது உண்மைதான்.

**தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்து தமிழ் அரசியல் பரப்பில் இப்போது முதன்மைப்படுத்தப்படுகின்றது. இது ஒரு கோமாளிக்கூத்து என்று தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். இது குறித்த உங்கள் பார்வை என்ன?**

இது முதிர்ச்சியற்ற அரசியலின் வெளிப்பாடாகவே எனக்குத் தோன்றுகிறது. அரசியல் தளத்தில் இருப்பவர்கள் அதற்குரிய நாகரீகத்துடன் சொற்களை வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் சமூகத்தில் இருக்கின்ற ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் வலிகளோடு பயணித்தவர்கள் என்ற வகையில் தமது இருப்பை உறுதிப்படுத்த அது முயற்சிக்கும். அவ்வாறான நிலையில் இவ்வாறான செயற்பாடுகளை அவ்வாறான வார்த்தைகளால் அளவீடு செய்வது என்பது அறிவியல் ரீதியாக இருக்கின்ற ஒரு சமூகத்துக்கு ஒவ்வாமையானதாக இருக்கலாம்.

அந்த உரை எதனைக் காட்டுகிறது என்றால், அரசியலின் முதிர்ச்சியற்ற தன்மை, அதனுடைய பலவீனம், அது சார்ந்திருக்கக்கூடிய உணர்ச்சிகரமான எண்ணங்களின் பிரதிபலிப்புத்தான் அந்த உரை. அதனைவிட அதன் உண்மைத் தன்மையை நோக்கி, அதன் நியாயத்தன்மையை நோக்கி விவாதங்களை முன்வைகக்கூடிய திறன் அந்தத் தரப்புக்களிடம் இல்லை என்கதைத்தான் அது காட்டுகிறது.

இதனைவிட, ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒரு நீண்ட ஆயுத, அரசியல் போராட்டத்துக்குள்ளால் பயணித்தவர்கள். தென்னிலங்கையின் அரசியலோடு சேர்ந்து 15 வருடகாலமாக அவர்கள் பயணம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்




# விலாங்கு மீன்களாக வலம்வரும் தமிழ் தேசிய கட்சிகள்

# கானல் நீராகுமா தமிழ் பொது வேட்பாளர் முயற்சி?

**இறுதிப் பகுதி**

இரா.மயூதரன்

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது என்ற கருத்தியலோடு முதலில் அனைவரும் ஒன்றித்து வரவேண்டும். அதன்பின்னர் பொது வேட்பாளராக பிரமுகர் ஒருவரை தேடுவதா அல்லது அதன் மூலமாக வட கிழக்கு தமிழர்களின் ஆதரவை குறிப்பிட்ட விடயத்திற்கு கோருவதா என்பதை முடிவு செய்ய வேண்டும். அதன் பின்னர் மிக முக்கியமாக வட கிழக்கு தழுவியதாக தமிழர்களின் வாக்குகளை பொதுவேட்பாளரை நோக்கியதாக அணி திரட்டுவதற்கான மூலோபாய செயற்பாடு மற்றும் களசெயற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும். உட்கட்சி பூசல்கள் கடந்து வடக்கு கிழக்கு தழுவியதாக கட்சி அரசியல் கடந்து தேசமாக செயற்படுவதற்கு உளமார அனைத்து கட்சிகளும் அணியமாக வேண்டும். இவை அனைத்தும் ஊடக வெளிச்சம் படாதவகையில் மிகவும் இரகசியமான முறையில் உள்ளக கலந்துரையாடல்களாக மேற்கொள்ளப்பட்டே ஆகவேண்டும்.



எமக்குள்ளாகவே விடயத்தை குழப்பியடிப்பதற்கும் பலவீனப்படுத்துவதற்கும் பலர் காத்துக்கொண்டிருக்கையில் 'நிறைவாகும் வரை மறைவாக இரு' என்ற உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் வரிகளின் வழியே மேற்குறித்த விடயங்கள் அனைத்தும் திரைமறைவு பேச்சுகளாக கடந்து செயல்வடிவம் மட்டுமே வெளித்தோற்றமாக வெளிப்படுத்தப்படுவதே காலத்தின் தேவையாகும்.

அதைவிடுத்து ஊடக சந்திப்புகளிலும், மேடை பேச்சுகளிலும் இவ்வாறு பொறுப்பற்ற தனமாக இந்த விடயங்கள் தொடர்பில் கருத்துகளை கூறுவதானது வெளியே இருக்கும் எதிராளிகளின் செயலை வழிமொழிந்து செயற்படுத்துவதாகவே அதாவது 'சேம் சைட் கோல்' போடுவதாகவே அமைந்துவிடுகிறது.

அதனை தற்போதைய அரசு தலைவர் ரணில் விக்ரமசிங்க சாட்சியமாக எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சித்தார்த்தன் போன்றவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மேடைகளில் அம்பலமேற்றி அழகுபார்த்துள்ளனர். ஜனாதிபதியின் அண்மைய வடக்கு விஜயம் முழுவதும் நீக்கமற நிறைந்திருந்த இவர்கள் திருவாய் மலர்ந்த வார்த்தைகள் அத்தனையும், அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களை அடியோடு மூடிமறைத்து அபிவிருத்திஅரசியலுக்கானசான்றுரைப்புகளகவே அமைந்துள்ளன. புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை நாசுக்காக தட்டிக்கழித்து, 'மறப்போம் மன்னிப்போம்' என்று நல்லாட்சி நல்லிணக்க லாவணி பாடியவர்கள் இன்று அபிவிருத்தி அரசியலின் குடுகுடுப்பைக்காரர்களாக மாறியுள்ளமை ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

தமிழரசு கட்சியின் எம்.ஏ.சுமந்திரன் எதிரிடையானவராகவே பார்க்கப்பட்டு வரும் நிலையில் தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பில் அவரது கருத்து நிலைப்பாட்டில் பெரிதாக ஏமாற்றமடைவதற்கு ஒன்றும் இல்லையாயினும் அவரது நகர்வுகள் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் தமிழர்களது இருப்புக்கும் மிகவும் ஆபத்தானவை என்தனையும் மறுத்துவிடமுடியாது. சஜித் அணியின் ஓரங்கமாக கருதப்பட்டு வரும் எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதியின் நிகழ்வுகளில் பங்கேற்று அவரது புகழ்பாடுகின்றமை பலரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. ஏற்கனவே எதிரணியின் பொது வேட்பாளராக களமிறங்க தயார் என்ற அறிவிப்பை அவர் விடுத்திருந்த பின்னணியில் அது தொடர்பாகவோ அல்லது வேறு விடயங்கள் சார்ந்தோ பேரத்தை அதிகப்படுத்தும் தந்திரமாகவும் இருக்கலாம். எது எப்படி இருந்தாலும் எம்.ஏ.சுமந்திரன் அணியினர் தென்னிலங்கை வேட்பாளர்களில் மேற்குறித்த இருவரில் ஒருவர் பக்கம் என்பது நிச்சயமானது.



தமிழரசு கட்சியின் தலைமை தமிழ் மக்களின் நிலையில் நின்று முடிவெடுக்கும் திராணியற்ற நிலை பழைய செய்தியாகிப்போய் விட்ட பின்னணியில் புதிய தலைவராக தெரிவாகி உட்கட்சி குழப்பத்தினால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாது பறிகொடுத்து நிற்கும் சிவஞானம் சிறிதரன் தரப்பினர் வெளிப்படையாகவே தமிழ் பொதுவேட்பாளர் கருத்தியலை வரவேற்று வருகின்றனர். தமிழ்த் தேசியம் சார்ந்த பின்னணியில் தனது இருப்பினை தகவமைத்துக் கொண்டிருக்கும் சிறிதரன் தரப்பு இந்த முயற்சியின் இறுதிவரை அதனோடு இருப்பதாக காட்டிக் கொள்ள முடியுமே தீவிர செயல் வீச்சை ஏற்படுத்தும் வகையில் உட்கட்சி புரட்சியின் மூலம் தமிழரசு கட்சியின் நிலைப்பாடாக அதனை மாற்றியமைக்க முடியாது.

இந்த முடிவு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருப்பினும், தமிழ் பொது வேட்பாளர் கருத்தியல் எல்லைக்குள் தலையையும் தென்னிலங்கை மற்றும் வெளி சக்திகளிடம் வாலையும் காட்டும் விலாங்கு மீன்களாக வலம்வரும் முன்னாள் த.தே. கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் நிலைப்பாடு தமிழ்த்தேசிய அரசியலின் சாபக்கேடாகும்.

தேர்தல் புறக்கணிப்பு என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடானது, மேற்குறித்த தரப்பினரது நிலைப்பாட்டிற்கு மாற்றான புரட்சிகர முடிவாக தென்பட்;டாலும், வட கிழக்கு மக்களை வழிநடத்தும் கையாலாகத்தனத்தை மூடிமறகை;கும் வகையில் எட்டாப்பழம் புளிக்கும் என்ற நிலைப்பாட்டின் வழியே எடுக்கப்பட்ட மிக மிக எளிமையான தீர்மானமாகும் என்பதை விளங்கிக்கொள்வது சுலபமாகும்.



ஆதரவுக்கும் எதிர்ப்புக்கும் இடையே ஊசலாடும் விலாங்கு மீன்களாக வலம் வரும் தமிழ்த் தேசிய கட்சிகளை மனதில் இருத்தியே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை நேரில் சந்தித்து தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒன்றுபட முடியுமா...? அப்படி ஒன்றுபட்டாலும் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்த முடியுமா..? என்று ஆணித்தரமான நிலையில் நின்று எழுப்பிய கேள்வி தமிழ்த் தேசிய அரசியல் மீதான பேரவமானமாகும். அதுமாத்திரமல்ல வெளியே இருக்கும் எதிர்ப்பு நிலைப்பாட்டில் உள்ளவர்களை காட்டிலும் கூடிக்கலையும் கலந்துரையாடல்களில் தலைகளை காட்டி விலாங்கு மீன்களாக வலம்வரும் தரப்பினரை அம்பலப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

சர்வதேச இராசதந்திரிகளின் பூகோள நலன்சார்ந்த கருத்துருவாக்கத்தில் புரையோடிப் போயுள்ள சிந்தனை வெளிக்குள்ளும், பிராந்திய நலன்சார்ந்து இலங்கை ஆட்சியாளர்களை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தங்கள் இறைமை பாதுகாப்பாக ஐரோப்பிய தேசிய மீட்டுருவாக்கத்தை ஐரோப்பிய ஒன்றியத் தேர்தலால் ஐரோப்பியர் உறுதிப்படுத்தினர்

## ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமைக்குப் பாதுகாப்பாகச் செய்யப்பட்ட 1977 இன் தேசிய மீட்டுருவாக்கத்தை ஐரோப்பியர் ஏற்க வைக்க வேண்டும்.

ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

**முன்னுரை**

**பிரித்தானிய கார்டியன் நாளிதழில்** ***10.06.2024*இல் சாம் ஜோன்ஸ் அவர்களும் அவரது முகவர்களும் "ஐரோப்பிய ஒன்றியத்து முக்கிய தேசங்களின் மக்கள் எவ்வாறு *2024* ஐரோப்பிய ஒன்றியத் தேர்தலில் வாக்களித்துள்ளனர்? இந்த வாக்களிப்பு எதனை தெரியப்படுத்துகிறது?- பிரான்சிலும் யேர்மனியிலும் ஒஸ்ரியாவிலும் அதீத வலுதுசாரிகளுக்குக் கிடைத்துள்ள ஆதரவின் அதிகரிப்பு மற்றைய நாடுகளில் மக்களுக்கு ஏற்படுத்திய கோபத்தால் மத்திய வலதுசாரி மற்றும் இடதுசாரிக் குழுக்களுக்கு பலத்த ஆதரவாகியுள்ளது** *( EU elections 2024: how did key countries vote and what does it mean?) - A surge in support for far-right parties in France, Germany and Austria was tempered by strong support for centrist and leftwing groups in other countries.* **என்பதனை வாசித்த பொழுது ஏற்பட்ட சிந்தனைகளின் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் தேசியத்தை ஐரோப்பியர்கள் ஏற்பதற்கு இத்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் புலத்திலும் செயற்பட வேண்டும் என்கிற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சிந்தனையாக இது அமைகிறது.**

இக்கட்டுரை பிரான்சிலும் யேர்மனியிலும் ஒஸ்ரியாவிலும் அதீத வலதுசாரிகள் எனப்படும் ஐரோப்பா ஐரோப்பியர்க்கே என்ற ஐரோப்பிய தேசியவாத வளர்ச்சி அதிகமாக இருப்பதாகக் கூறினாலும் மற்றைய நாடுகளிலும் முன்னரை விட இந்த ஐரோப்பிய தேசிய வாதத்தின் விழிப்பும் உணர்ச்சியும வளர்ச்சியும் உணரப்படுகிறது என்பதை எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கு.



கூடவே நேட்டோவின் இராணுவப் பயிற்சி *(Drill)* முயற்சிகள் ஐரோப்பா பாரிய யுத்த மொன்றை எதிர்கொண்டால் தன்னைப் பாதுகாப்பதற்கான நடைமுறைப் பலப்படுத்தலாக உள்ளது. ரஸ்ய உக்ரேன் யுத்தமும் இஸ்ரேலியரின் பலஸ்தீனியர் மேலான இனஅழிப்பு இனத் துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு யுத்தமும் ஐரோப்பிய ஒற்றுமை என்கிற மீளுருவாக்கத்தின் தேவையை வலுப்படுத்துவது இயற்கையே. இவ்வாறு தங்கள் இறைமையினைப் பாதுகாக்க ஐரோப்பியர்கள் ஐரோப்பியர்கள் தேசிய மீளுருவாக்கம் செய்வதை காலத்தின் தேவை எனக் கருதுகின்ற பொழுது ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையின் மீட்டுருவாக்கத்தின் வழி தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய காலத்தின் தேவை ஏற்பட்டுள்ளதை இந்நேரத்திலாவது ஐரோப்பிய நாடுகள் உணர்ந்து ஈழத்தமிழர்களின் தேசிய நீக்கத்துக்கு இலங்கையிலும் வெளியிலும் எடுக்கப்படும் அனைத்து ஒடுக்குமுறைகளிலிருந்தும் அடக்கு முறைகளிலிருந்தும் ஈழத்தமிழரின் தேசியத்தின் மீளுருவாக்கத்தை ஐரோப்பிய நாடுகள் ஏற்று ஈழத்தமிழரின் வெளியகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அவர்கள் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியான வளர்ச்சிகளுடன் கூடிய வாழ்வை இலங்கையில் காலனித்துவ அரசுகளின் காலம் ஏற்படுவதற்கு முன்பிருந்தது போல புதிய அனுபவங்களுடன் தெரிவாகியுள்ள ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் உதவிட வேண்டும். இதனை ஐரோப்பாவில் வாழும் ஈழத்தமிழர்கள் தங்கள் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களின் சந்தேகங்களை நீக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் தலையாய நோக்கு.



**இனி ஐரோப்பிய நாடுகளின் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் மாற்றங்களை எடுத்து நோக்குவோம்**

ஒஸ்ரியாவில் 25.7 வீத வாக்குகளை அதீத வலது சாரிக்கட்சி *Far-right party - (FPOe)* பெற்று ஆட்சியில் உள்ள பழமைவாத மக்கள் கட்சிக்கு *[ Conservative People's Party - (OeVP)]* 24.7 வீத வாக்குகள் கிடைத்த நிலையில் முன்னணி பெற்றது. சமூக ஜனநாயகக் கட்சிக்கு *[Social Democrats (SPOe)]* 23.2 வீத வாக்குகளும் பசுமைக்கட்சிக்கு *(Greens)* 10.7 வாக்குகளும் பதிவாகின. இங்கு குறிப்பிடத்தக்க விடயம் பசுமைக்கட்சிக் கொள்கையான உலகின் சுற்றுச் சூழலைப் பேணுதல் 21ம் நூற்றாண்டின் உலக அரசியல் செல்நெறியாக மாறும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாகக் கடந்த 2019ம் ஆண்டு ஒஸ்ரிய ஐரோப்பிய ஒன்றியத் தேர்தலில் 14 வீத வாக்குகளைப் பெற்ற ஒஸ்ரிய பசுமைக்கட்சியின் வாக்குகள் 10.7 வீதமாக வீழ்ச்சியடைந்தமை நிறவாதம் மீண்டும் ஐரோப்பிய அரசியல் செல்நெறியாக இளையவர்களாலும் முன்னெடுக்கப்படத் தொடங்கிவிட்டதா என்பதேயாகும். குடிவரவுக்கு எதிரான ஒஸ்ரியாவின் அதீத வலதுசாரிக் கட்சியின் தலைவர் ஹேர்பேர்ட் கிக் செப்டெம்பரில் நடக்கவுள்ள ஒஸ்ரியாப் பாராளுமன்றத் தேர்தலில் தகுந்த கூட்டுக் கட்சிகளை இணைத்து ஒஸ்ரியாவின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான முன்முயற்சிகளைத் தொடங்கியுள்ளார். இது ஐரோப்பியர்கள் தங்கள் தேசிய மீட்டுருவாக்கலை சர்வதேசியத்தைப் பின்தள்ளி மீளவும் மீட்டுருவாக்கம் செய்யத் தொடங்கியுள்ளமையைத் தெளிவாக்குகிறது.

பெல்ஜியத்தில் நடைபெற்ற பாராளுமன்ற உள்சபைகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய மூன்று தேர்தல்களிலும் வாக்குகள் அதீத வலதுசாரிக்கட்சி வலமாஸ் பெலாங் *( Far right Vlaams Belang),* பிரெஞ்சு மொழி பேசுபவர்களின் தாராண்மைவாதச் சீர்திருத்தக்கட்சி *(The French -Speaking liberal party Mouvement Reformateur)* புதிய பிளெமிஸ் கட்சிக் கூட்டணி *( New Flemish Alliance)* ஆகியவற்றுக்கு ஒவ்வொரு கட்சிக்கும் 13 வீதமாக அமைந்து மக்களின் தீர்மானமெடுக்கும் சக்தி மூன்றுபட்டுள்ளமையை வெளிப்படுத்தியது. இது அதீத வலதுசாரித்தனத்தின் விழிப்புணர்வால் மக்கள் ஒற்றையாட்சி கூட்டாட்சி முறைமைகளில் திருப்திப்படாது. மக்கள் என்ற உரிமையில் தங்கள் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளின் ஏற்பினை உறுதிப்படுத்தும் அரசியல் முறைமையை நோக்கி ஐரோப்பா மீளவும் செயற்படத் தொடங்கியுள்ளதைத் தெளிவாக்குகிறது.

டென்மார்க்கில் எதிர்பாராதவிதத்தில் சோசலிச மக்கள் கட்சி *[Socialist People's party (SF)]* முன்னைய தேர்தலை விட 4.2 வீத வாக்குகளை அதிகமாகப் பெற்று 17.4 வீத வாக்குகளைப் பெற்ற முதன்மைக்கட்சியாகியுள்ளது. அதே வேளை தற்போதைய ஆளுங்கட்சியான சோசலிச ஜனநாயகக் கட்சிக்கு *( Social Democrats )* முன்னைய தேர்தலை விட 5.9 வீத வாக்கு இழப்பு ஏற்பட்டு 15.6 வீத வாக்குகளே கிடைத்துள்ளது. டென்மார்க்கின் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன் *(Mette Frederiksen)* அவர்கள் தன்னுடைய இன்ஸ்டகிராம் குறும்பதிவில் "தனது சோசலிச ஜனநாயகக் கட்சியினதும் சோசலிச மக்கள் கட்சியினதும் கொள்கைகள் சோசலிசத்தை மையப்படுத்திய நிலையில் சோசலிச மக்கள் கட்சியின் வெற்றி ஐரோப்பாவின் மற்றைய நாடுகளில் அமைந்தமை போன்று அதீத வலதுசாரிக்கட்சி குறிப்பிடத்தக்க வெற்றியினைப் பெறாது தடுத்து டென்மார்க்கிற்குத் தனித்துவத்தை அளித்துள்ளது" எனப்பாராட்டியுள்ளார்.



பிரான்சில் மரைன் லீப்பென்னின் *(Marine Le Pen)* அதீத வலதுசாரிப் பேரணி *(Far-right National Rally)* 32வீத வாக்குகளைப் பெற பிரான்சின் ஜனாதிபதி இம்மனுவேல் மக்ரேன் *(Emmanuel Macron)* அவர்களின் கூட்டணி 15 வீத வாக்குகளையே பெற்று பிரான்சில் அதீத வலதுசாரித்தன்மை வீறுகொண்டெழுவதை வெளிப்படுத்தியது. இதனைப் பார்த்துக் கொண்டு தன்னால் பேசாதிருக்க முடியாது என்ற பிரான்சிய ஜனாதிபதி மக்ரோன் பிரான்சின் சட்டவாக்க சபைக்கான தேர்தலை யூன்30ம் நாளில் நடாத்தி பிரான்ஸ் மக்கள் அதீத வலதுசாரி ஆட்சியை விரும்புகிறார்களா

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

# நில அபகரிப்பை தடுப்பதற்கு எந்த ஒரு அமைப்பாலும் முடியாது

**பாகம் 1**

**தர்மலிங்கம் சுரேஸ்**

ஒற்றை ஆட்சி கட்டமைப்பின் கீழ் இருந்து கொண்டு வடகிழக்கில் இருக்கின்ற நில அபகரிப்பை தடுப்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாத்திரம் அல்ல எந்த ஒரு அமைப்பாலும் முடியாது ஆகவே இந்த ஒற்றை ஆட்சி முறைமை நிராகரிக்கப்பட்டு சமஸ்டி கட்டமைப்பு உருவாக்கப்படும் வரை நம்முடைய ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் சரி பகிஸ்கரிக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் அந்த முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.



இலக்கு வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் வழங்கிய பேட்டியின் விபரம்.

இன்று கிழக்கு மாகாணத்தில் பல்வேறு பட்ட காணி பிரச்சினைகள் நிலவுகின்றது இவ்வாறான நிலையில் விகாரைகள் அமைப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது இன்றே கணக்கில் உள்ள காணி பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகளாக எவை காணப்படுகின்றது?

குறிப்பாக நீண்ட நெடுங்கால பிரச்சினையாக இருக்கின்ற ஒரு விடயம் மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பிரச்சினை. அங்கு தமிழர்களுடைய பூர்வீக காணிகள் அபகரிக்கப்பட்டு மகாவலி வலது கரைக்குள்ளே செல்கின்றது அந்த நிலைமை தடுக்க முடியாத ஒரு ஒரு உள்ளம் தட்டு அற்ற அரசின் உடன் சேர்ந்த அமைச்சர்களாக தான் இங்கு மட்டக்களப்பில் இருக்கின்றவர்கள் இருக்கின்றார்கள் அது கண் முன்னே நடந்தேறிக் கொண்டிருக்கின்றது.

அதேவேளை இங்கு தற்போது மட்டக்களப்பு மாநகர சபையில் மக்களினுடைய புகார்களுக்கு அமைய மட்டக்களப்பு மாநகர சபைக்கு சொந்தமான அரச காணிகள் மிக நீண்ட காலத்திற்கு வழங்கப்படுவதன் மூலம் பெருமளவு பணங்கள் பெறப்படுவதாகவும் மோசடி இடம் பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

எனவே இது தொடர்பாக பாரிய விசாரணை நடாத்தப்பட வேண்டும் இங்கே நடந்து வருகின்ற அநியாயங்கள் நிறுத்தப்பட வேண்டும் மக்களுடைய வரிப்பணத்திலே வாழுகின்றவர்கள் அந்த மக்களுக்கு வசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காமல் மாறாக தங்களுடைய சுகபோகங்களுக்காகவும் தங்களுடைய குடும்ப சொந்தங்களை வளர்ப்பதற்காகவும் இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயம் ஆகவே தகுந்த இந்த குற்றத்தில் ஈடுபடுகின்றவர்களுக்கு சரியான விசாரணை நடத்தப்பட வேண்டும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பது எங்களுடன் நிலைப்பாடு.

கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பைத் தடுப்பதற்காக தமிழ் தேசிய முன்னணி எவ்வாறான முன்னெடுப்புகளை மேற்கொள்கின்றது?

எங்களைப் பொறுத்தமட்டில் காணி அபகரிப்புகள் வடகிழக்கு பூராக நடந்தேறி வருகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் குறிவைக்கப்பட்டிருக்கின்றது. கிரான் பிரதேசத்தில் இருக்கின்ற நெடுகல்மலை பிரச்சனை அங்கு இன்று ரகசியமான முறையில் கிரீன் டெம்பிள் என்கின்ற பெயரிலே ஒரு விகாரை ராணுவத்தினரினால் கட்டப்பட்டு வருகின்றது அதேபோன்று கிளிநொச்சியில் சந்திரன் பூங்கா அபகரிக்கப்பட்டு இராணுவத்தின் உடைய கட்டுமான பணிகள் அங்கே இடம்பெற்று வருகின்றது.

இவை எல்லாம் சட்ட விரோதமாக இடம்பெறுகின்ற செயல்பாடுகள்.இவைகளுக்கு எல்லாம் நீதிமன்றங்கள் இருக்கின்றது ஆனால் இந்த விடயங்களுக்கு நீதிமன்றங்கள் ஏன் அனுமதி வழங்குகின்றது என்று தான் எங்களுக்கு கேள்வியாக இருக்கின்றது. கிரான் பிரதேசத்திலே இங்கு கட்டப்படுகின்ற விடயத்திற்கு பிரதேச செயலகத்தில் அனுமதி பெற்று இருக்க வேண்டும்.; ஆனால் அந்த அனுமதி வழங்கப்பட்ட விடயங்கள் அம்பலப்படுத்தப்படவில்லை விகாரை கட்டுவதற்கு யாருடைய அனுமதி பெற்று அதனை செய்கின்றார்கள் என்கின்ற கேள்வி எழுகின்றது.



இதன் பின்னால் மோசடியில் இருக்கின்ற அதிகாரிகளும் இதனுடன் தொடர்புபட்டவர்களும் மக்களுக்கு விரைவில் அம்பலப்படுத்தப் படுவார்கள் அதற்கான நடவடிக் கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

நிச்சயமாக தமிழ் மக்களினுடைய காணிகள் அபகரிக்கப்படுகின்ற இடங்களில் நாங்கள் அம்பலப்படுத்திக் கொண்டிருக்கின்றோம் இன்றும் யாழ்ப்பாணத்தில் உங்களுக்கு தெரியும் தையிட்டி விகாரை கட்டி முடிந்து ஒரு வருடம் நிறைவடைந்து இருக்கின்றது இன்றும் அந்த போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது ஒரு வருடம் நிறைவடைந்தும் கூட சட்டத்திற்கு முரணாக கட்டப்பட்டிருக்கின்ற விகாரை அகற்றப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கைக்கு அமைய அந்த போராட்டம் நடைபெற்று வருகின்றது அந்த பகுதியில் உள்ள மக்களாலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராலும் தொடர்ச்சியாக அந்த விடயங்கள் வெளிக்கொண்டு வரப்படுகின்றன.


நாங்கள் சட்டரீதியாக சில விடயங்களை அணுகுகின்ற போது நீதிமன்றங்களை பிழையாக வழிநடத்தி அவர்களிடமிருந்து அதற்கு அனுமதி பெற்று அவர்கள் நீதிமன்ற கட்டளைகள் விதித்தும் கூட அதற்கு செல்ல வேண்டாம் என மறுப்பு தெரிவித்தும் கூட உயர் பீடத்தினுடைய அதிகார துஷ்பிரயோகங்களை பயன்படுத்தி அவர்கள் அவ்வாறானநடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள் என்றால் அதை தான் நாங்கள் நீண்ட காலமாக கூறி வருகின்றோம்.

இந்த ஒற்றை ஆட்சி கட்டமைப்பின் கீழ் இருந்து கொண்டு வடகிழக்கில் இருக்கின்ற நில அபகரிப்பை தடுப்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாத்திரம் அல்ல எந்த ஒரு அமைப்பாலும் முடியாது ஆகவே இந்த ஒற்றை ஆட்சி முறைமை நிராகரிக்கப்பட்டு சமஸ்டி கட்டமைப்பு உருவாக்கப்படும் வரை நம்முடைய ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் சரி பகிஸ்கரிக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் அந்த முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றார்கள்.

இப்போது தேர்தல் தொடர்பில் பேசப்பட்டு வருகின்றது பொது தேர்தல் ஒன்று இடம் பெற்றால் அதனையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி விமர்சிக்குமா?

பொதுத்தேர்தல் நடைபெற்றால் நிச்சயமாக அந்த தேர்தலில் போட்டியிடுவோம் ஏனென்றால் அதில் நாங்கள் போட்டியிடுகின்ற போதுதான் எங்களுக்கு ஓரளவேனும் அதிகாரம் கிடைக்கும் அந்த அதிகாரத்தின் ஊடாக பாராளுமன்றத்திற்கு சென்று நாங்கள் சத்திய பிரமாணம் செய்து கூட எங்களுடைய விடயத்தை அம்பலப்படுத்தலாம் தமிழ் மக்களுக்கு எவ்வளவு பாதிப்பு இருக்கின்றது என்பதனை அம்பலப்படுத்தலாம்.

இன்று 15 வருடங்கள் கடந்துள்ள நிலையிலேயே இன்று எங்களுடைய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு சென்று சொல்லி இருக்கின்ற விடயம் தமிழ் மக்களுக்கு இனப்படுகொலை இடம்பெற்று இருக்கின்றது என்பதனை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் முதன்முதலாக பாராளுமன்றத்தில் கூறியிருக்கின்றார்.




அவ்வாறான மிக முக்கியமான விடயங்களை பாராளுமன்றத்தின் ஊடாக உலகத்திற்கு கூறலாம் அப்போதுதான் நமது மக்களினுடைய பாதிப்புகளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் கூறுகின்ற போதுதான் உலகம் அதனைப் பார்க்கும் நாங்கள் தெரிவு செய்யப்படாமல் அல்லது அதிகாரம் இல்லாமல் வெளியில் கூறும் போது அதனை உலகம் செவிமடுக்காது என்பதனை நான் இந்த இடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அப்போது தேர்தல் பகிஸ்கரிப்பு முடிவினை ஏன் எடுத்தீர்கள் இதில் எதனை சாதிக்கலாம் என நினைக்கின்றீர்கள்?

உண்மையில் இலங்கை அரசினுடைய

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நிலையை கண்டு கொள்ளாதவர்கள்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப்பதற்கு சனிக்கிழமை (08) பாறை உடைப்பு இயந்திரத்துடன் உடைப்பு வேலைகளை ஆரம்பிக்க முயன்ற போது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.



ஆனால் உடைப்பு இயந்திரம் அப்பகுதியில் இருந்து இன்னும் அகற்றப்படவில்லை. இவ்விடயம் சம்மந்தமாக சேனையூர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பொலிசில் முறைப்பாடு செய்ததாக தெரிவித்தார்.

**ஞாயிற்றுக்கிழமை (09) அப்பகுதியில் மக்கள் கூடி நின்றனர் மக்கள் கருத்து தெரிவிக்கையில்...**

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக்காக எமது வாழ்வாதரத்தினை அழித்தொழிக்கும் நடவடிக்கையினை உடன் நிறுத்த வேண்டும். வாழ்வாதாரத்தினை பாதிக்கும் வகையில் மலைகளை உடைப்பதற்கு அனுமதி வழக்கியது யார் என்ற கேள்வியை எழுப்பினர்.

**சேனையூர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கருத்து தெரிவிக்கையில்..**

நாளாந்தம். கூலித் தொழிலையும், நெற்செய்கை, கால் நடை வளர்ப்பு போன்ற வாழ்வாதார முயற்சிகளை நம்பி வாழ்ந்து வரும் மக்கள்தான் இப் பகுதியில் இருக்கின்றனர்.

குளம், வயல், காடு போன்ற வளங்களையே நம்பி வாழ்கின்றனர் மலையைச் சூழவுள்ள வயல்கள், மேய்ச்சல் தரை இயற்கைக் காட்டு வளம் என்பன கல்லுடைப்பால் அழிவுறும் அபாயம் ஏற்படும் என்றார். இவ் மலையில் இந்து வழிபாட்டு அடையாளங்களும் கானப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வளங்களை அழிக்கும் நிலைதான் மக்களையும் மீறி ஏற்படுகிறது வடகிழக்கில் தொல்பொருள் என்ற போர்வையில் தனியார் காணி அபகரிப்பு போன்றன வட கிழக்கில் மாத்திரம் ஏன் இடம் பெறுகின்றது. வெடி பொருட்களை கொண்டே மலையை தகர்த்தி அதில் உள்ள கற் பாறைகளை எடுக்க முயற்சிக்கின்றனர் சட்ட ரீதியான அனுமதி என்றாலும் அரச திணைக்களங்களின் ஒட்டு மொத்த அனுமதி உடனே எந்த விதமான செயற்பாடுகளையும் மேற் கொள்ள முடியும் இப் பகுதியில் மக்களின் வாழ்வாதாரமாக விவசாய செய்கை குளங்களை நம்பி செய்கை பண்ணப்படுகிறது கால் நடைகள் வளர்ப்பு இடம் பெறுகின்றது இவ்வாறான நிலையில் இந்த மலைகளை உடைப்பதனால் பல சூழலியல் தாக்கங்கள் பல பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புவிச்சரிதவியல் சுரங்கப்பணியகம், வன ஜீவராசிகள் திணைக்களம், சுற்றாடல் அதிகார சபை,தொல்பொருள் திணைக்களம் ,பிரதேச செயலகம்,காணி திணைக்களம்,விவசாய சம்மேளனம் உட்பட பல திணைக்களங்களின் அறிக்கைகள் சாதகமாக பெறப்பட்டதன் பின்பு



தான் அனுமதிகளை முறையாக பெறலாம் ஆனால் அரசியல் அதிகாரம் படைத்த கொந்தராத்துக்காரர்கள் மக்களின் கருத்துக்களை செவி சாய்க்காது இது போன்ற விடயங்களில் ஈடுபடுவது கவலையளிக்கிறது.

எது எவ்வாறாக இருந்த போதிலும் அப் பகுதிஅப்பாவி மக்கள் சம்பூர் பொலிஸாரால் பத்து நபர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இதன் போது 1979 ஆம் ஆண்டின் 15 ம் இலக்க குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை 81 கீழ் சமாதான குழுவை ஏற்படுத்தக் கூடிய செயல் ஒன்றை செய்த அடிப்படையில் சம்பூர் பொலிசார் 10 பேரை செவ்வாய்க்கிழமை (11) கைது செய்து பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

விடுவிக்கப்பட்ட 10 பேரும் மூதூர் நீதிமன்ற நீதிமன்றில் புதன்கிழமை (12.06.2024) மதியம் 12.20 மணிக்கு ஆஜர் ஆகினர் நீதிமன்றமானது இவர்கள் அனைவரையும் சொந்தப் பிணையில் விடுவித்ததோடு குறித்த பிரதேசத்தை இம் மாதம் 15 ம் திகதியன்று நீதிவான் பார்வையிடுவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

10 பேருக்கும் சார்பாக சட்டத்தரணிகளான பு. முகுந்தன், ந. மோகன் ஆகியோர் ஆஜர் ஆகியிருந்தனர்.

இதில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை தலைவர் சண்முகம் குகதாசன் குறித்த பிரதேசத்துக்கு விஜயம் செய்து மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.



"பல வருட காலமாக இங்கு குடியிருந்து வருகிறோம் இங்கு பயிர்ச் செய்கை மூலமே வாழ்வாதாரத்தை கொண்டு சீவிக்கிறோம் அதற்குள் இம் மலையை உடைத்தால் நாங்களும் அழிந்து விடுவோம் மலை உடைப்பு தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்ய சென்ற போதும் முறைப்பாட்டை ஏற்காமல் உரிய இடத்துக்கு வந்து அவர்களை வேலைகளை செய்ய விட்டு எங்களை கைது செய்தார்கள் எனவே வாழ்வாதாரத்தை அழித்து நாசமாக்கி மலையை உடைக்க வேண்டாம்" என அப் பகுதி குடும்பத் தலைவி ஒருவர் தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

மக்கள் உரிமைகளை செவிமடுக்காது பொலிஸாரும் அடாவடியில் ஈடுபட்டதாகவும்

**திருமலையான்**

மக்கள் தெரிவிக்கின்றனர் பொய் குற்றச்சாட்டை முன்வைத்து அப்பாவி மக்களை கைது செய்து சிறையில் அடைப்பதும் உரிமைகளை மீறும் செயலாகும் இவ்வாறாக சிறுபான்மை மக்கள் மீது அதிகாரத்தை வைத்து அவர்களை அடக்கி ஒடுக்க நினைப்பதும் அதிகார துஷ்பிரயோகமாக கருதப்படுகிறது .அன்றாட ஜீவனோபாயத்தை கூட தங்களால் மேற்கொள்ள முடியாமல் இம் மக்கள் வருந்துகின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்கள்,குழந்தைகளை வைத்து பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வாதாரத்தை ஏன் அழிக்க நினைக்கிறார்கள்.



"மாரி காலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் இந்த குளத்தை நம்பியே விவசாயத்தில் ஈடுபடுகிறோம்சுமார்25க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கிறோம் " என அப் பகுதி விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்க திணைக்களங்களின் துறைசார் உத்தியோகத்தர்களின் மூலமான அனுமதிகள் ஊடாக அனுமதிகள் வழங்கப்பட வேண்டும் மலை உடைப்புக்கு பயன்படுத்தும் வெடிபொருட்கள் மூலமாகவும் ஒலி மாசடைவு உட்பட பல பாதக விளைவுகள் ஏற்படக்கூடும் இதனால் அப் பகுதி மக்களே பாதிக்கப்படுவார்கள். மக்களுடைய விவசாய செய்கை கால் நடை வளர்ப்பு சுத்தமான நீரை பெற முடியாது குளங்கள் பாதிப்பு என பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

"காய்ந்த விறகுகளை கூட எடுக்க முடியாது வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தடுத்து நிறுத்துவர் ஆனால் இவர்களுக்கு மலையை உடைக்க அனுமதி கொடுப்பார்கள் பெரும் கஷ்டத் துக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறோம் அரசாங்கம் தான் மக்களை பாதுகாக்க வேண்டும் இதற்காக அரசாங்கம் உதவ வேண்டும் " என குடியிருப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.



மக்களுக்கு ஒரு சட்டம் மலையை உடைப்பவர்களுக்கு ஒரு சட்டமா சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற வார்த்தைக்கே அர்த்த மற்றதாகிவிடுகிறது.

"இந்த மலையால் 200வருடங்கள் பழமை வாய்ந்த கோயில் ஒன்று உள்ளது வணக்கஸ்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# வறுமைச் சிறைக்குள் பெருந்தோட்ட சமூகம்

## துரைசாமி நடராஜா

பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல காரணங்கள் இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கு வித்திட்டுள்ளன. இந்நிலையில் இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை நிலையானது ஏனைய சமூகங்களிலும் பார்க்க பெருந்தோட்டங்களில் உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதாக உலக உணவுத் திட்டத்தின் 2023 ம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு பாதக விளைவுகளுக்கும் உந்துசக்தியாக அமையும் நிலையில் பெருந்தோட்டத்துறையில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப் படுத்த வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது.



பெருந்தோட்டத்துறை நாட்டின் தேசிய வருமானத்தில் கணிசமான வகிபாகத்தினை வழங்கிவருகின்றது. ஒருகாலத்தில் நாட்டின் முதுகெலும்பாக பெருந்தோட்டத்துறை வர்ணிக்கப்பட்டதும் உங்களுக்கு நினைவிருக்கக் கூடும். இத்துணை பெருமைமிக்க பெருந்தோட்டத்துறை படிப்படியாக செல் வாக்கிழந்து வருவது வருந்தத்தக்க ஒரு விடயமேயாகும். பெருந்தோட்ட மக்கள் நாடுயர பாடுபட்டு வருகின்றபோதும் அம்மக்களின் வாழ்க்கை நிலை இன்னும் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காணவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

இம்மக்களின் உழைப்பை உறிஞ்சுவதில் ஆர்வம் காட்டும் முதலாளிவர்க்கம் அடிப்படை தேவைகளைக் கூட இம்மக்களுக்கு நிறைவேற்றி வைப்பதாக இல்லை. உழைப்பிற்கேற்ற ஊதியமின்மையானது இம்மக்களை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ள நிலையில் ஏனைய துறைகளின் பாதிப்பிற்கும் இது அடிப்படையாக அமைந்துள்ளது.

### பாரபட்சம்

பெருந்தோட்ட மக்களோடு வறுமை பின்னிப் பிணைந்ததாக காணப்படுகின்றது. 'ஆரம்ப காலந்தொட்டே பெருந்தோட்டத் தமிழ் மக்கள் போதுமான வருமானமின்மை, தமது தனிமனித இயலுமைகளையும் ஆற்றல்களையும் மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பின்மை, மனித உரிமைகள் மறுக்கப்படுதல், தனிமைப்படுத்தப்படுதலும் ஒதுக்கி வைக்கப் படுதலும் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வந்தனர்.



பெருந்தோட்டங்களோடு அவர்களைப் பிணைக்கும் வதிவிடம், மானிய முறையானது அவர்களிடையே தாம் ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகம் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. தோட்ட சமூகத்தினை நாட்டின் தேசிய நீரோட்டத்தோடு இணைத்துக் கொள்வதற்கான சிறந்த வழி வதிவிட மானிய முறையிலிருந்து அவர்களை விடுவிப்பதேயாகும். ஏனைய துறைகளைச் சேர்ந்த மக்களோடு ஒப்பீட்டு ரீதியில் இலங்கையின் பெருந்தோட்ட மக்களே ஆகக்கூடிய வறுமை நிலையில் வாழுகின்றனர் என்பதை புள்ளிவிவரங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. உலக வங்கியின் ஆய்வொன்று நாட்டில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலேயே மக்கள் வறுமையின் உச்சப்பிடியில் சிக்கி இருப்பதாக கூறுகின்றது என்று பேராசிரியர் எம்.சின்னத்தம்பி கூறுகின்றார்.

மேலும் பெருந்தோட்ட மக்களின் வறுமையானது வருமானம் சார்ந்த ஒரு வறுமையாக மட்டுமன்றி தமது மனித அபிவிருத்தியை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாததால் ஏற்படும் ஒரு வறுமையாகவும் உள்ளது. வறுமையை நிர்ணயிப்பதில் பொருள் சார்ந்த காரணிகளோடு பொருள் சாராத காரணிகள் சிலவும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதும் புத்திஜீவிகளின் கருத்தாகவுள்ளது.



இதேவேளை நகர்ப்புற வறிய மக்கள், உலர் வலய விவசாயிகள், மீனவர்கள் போன்றோர் பின்தங்கிய சமூகங்களுள் சிலவாகக் காணப்படுகின்றனர். ஆனால் பெருந்தோட்டத் தமிழ் மக்களுக்கும் இங்கே குறிப்பிட்ட ஏனைய குழுக்களுக்கும் இடையே ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. ஏனைய குழுக்களைப் பொறுத்தவரை, அவர்களில் ஒரு பகுதியினர் மட்டுமே பின்தங்கிய நிலையில் உள்ளனர். ஆனால் முழுதோட்டத் தமிழ் சமூகமுமே பின்தங்கிய நிலையில் இருப்பதே இந்த வேறுபாடாகும் என்ற கருத்து வெளிப்பாடுகளும் இருந்து வருகின்றன.

பெருந்தோட்ட மக்கள் ஆரம்ப காலந்தொட்டே வறுமை நிலையில் இருந்து வருவதனை ஆய்வுகள் பலவும் வலியுறுத்து கின்றன. 1994 காலப்பகுதியில் உலக சுகாதார நிறுவனம் இலங்கையில் மேற்கொண்ட ஆய்வுகள், 1976 இல் நிகழ்ந்த இலங்கை போஷாக்கு அளவீடு மற்றும் தோட்ட மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகள் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் எனப்பலவும் இதற்கு சான்று பகர்வதாக உள்ளன.

இதேவேளை காணிப் பங்கீட்டில் பெருந்தோட்டமக்களுக்குஎதிராககாட்டப்படும்பாரபட்சங்கள், தனிமனிதரதும் சமூகத்தினதும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் என்பன குறித்தும் நோக்கவேண்டியுள்ளது. தேயிலைத் தோட்டங்களில் காலத்துக்குக் காலம் எல்லைக் காணிகள் சுவீகரிக்கப்பட்டு குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றில் தோட்ட மக்களுக்கு காணித்துண்டு கள் வழங்கப் படுவதில்லை. மேலும் தோட்டக் காணிகளில் இருந்து தோட்ட மக்களை அப்புறப்படுத்தி வேறு தேவைகளுக்காக அக்காணிகள் சுவீகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இத்தகைய நடவடிக்கைகளும் பெருந்தோட்ட மக்களின் வறுமை நிலை அதிகரிக்க தூபமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம்மக்களின் வறுமை நிலையானது உணவுப் பாதுகாப்பின்மை உள்ளிட்ட பல விடயங் களிலும் தாக்கம் செலுத்துகின்றது.




### உலக உணவுத் திட்டம்

உலக வங்கியின் அண்மைய அறிக்கையின்படி உணவுப் பணவீக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை 5 ஆவது இடத்தில் உள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடியானது தீவிரமான உணவு நெருக்கடியில் இருந்தே உருவாகியுள்ளது. இதேவேளை 2018 ம் ஆண்டிலிருந்து போஷணைமிக்க உணவின் சராசரி மாதச்செலவு 156 சதவீதம் உயர்ந்துள்ளதாக உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதி அப்துல் ரஹீம் சித்திக் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக




பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் போஷணை மற்றும் வளர்ச்சி என்பவற்றுக்கு அவசியமான வளங்களைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலையிலுள்ளதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் பெருந்தோட்ட பெற்றோர்களும் அதிகளவில் உள்ளடங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடுமையான வறுமை நிலைக்கு ஆளாகியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்தை தாண்டியுள்ளதாக குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கை உறுதிப்படுத்தியது. எனினும் இத்தொகை மேலும் அதிகமாக இருக்கக்


தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# 2024 கொனீபா மகளிர் உலகக்கிண்ண போட்டியில்

# தமிழீழ மகளிர் உதைபந்தாட்ட அணி சாதனை



கொனீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதி ஆட்டம் கடந்த 08.06.2024 சனிக்கிழமை நோர்வேயின் Bodø நகரில் நடைபெற்றது. சப்மி நாட்டு அணியினை எதிர்த்து தமிழீழ மகளிர் உதைபந்தாட்ட அணி மோதியது. மிகவும் பலம் பொருந்தியதும் 2022 ஆம் ஆண்டின் உலககிண்ண வெற்றியாளருமாகிய சப்மி அணியினரை எதிர்த்து ஏழு நாடுகளில் இருந்து விண்ணப்பித்த 89 வீராங்கனைகளில் 22 பேரை நோர்வேயின் ஒஸ்லோவில் ஒன்றிணைத்து ஒரு வாரம் பயிற்சிகள் வழங்கி அணிக்கான பிணைப்பினை ஏற்படுத்தி எமது போராட்டம்,



தேசியத்தலைவர், மாவீரர்கள் தொடர்பில் விசேட பயிற்சி பட்டறைகள் நடத்தப்பட்டு வீராங்கனைகளுக்கு உணர்வூட்டப்பட்டு அணியினை தயார்ப்படுத்தி Bodø வில் நடைபெற்ற உலகக்கிண்ண போட்டியில் பங்கேற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.



பிற்பகல் 14.00 மணிக்கு ஆட்டம் கொடி வணக்கத்துடன் ஆரம்பமானது. ஆட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் கொனீபாவின் அனுமதியுடன் 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் இனவழிப்புக்கு உள்ளான அனைவரையும் நினைவுகூர்ந்து ஆட்டத்தினை ஆரம்பித்தனர். தொடக்கத்தில் இருந்தே சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தி எதிரணிக்கு அச்சத்தினை ஏற்படுத்தினர். எதிரணியினால் அடிக்கப்பட்ட பந்துகளை தனது சிறப்பான ஆட்டத்தின்மூலம் பந்துகாப்பாளர் சாரா தடுத்தாடினாள். எமது வீராங்கனைகள் வேகம், மதிநுட்பமான ஆட்டத்தினூடாக 13 வது நிமிடத்தில் பிறீத்தி கொடுத்த அழகான பந்தினை டிலக்ஷிகா. சப்மி பந்து காப்பாளரின் தலைக்கு மேலால் வலைக்குள் அனுப்பினார். இதன் மூலம் 1:0 என்னும் 75 வது நிமிடம்வரை முன்னணியில் நின்ற அணி நடுவரின் தவறான முடிவினால் தண்டனை உதை மூலம் ஒரு இலக்கினை எதிரணி பெற்று சமநிலையில் நின்றது. பின்னர் ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது கிடைத்த மூலை உதையினைப் பயன்படுத்தி சப்மி அணி இன்னொரு இலக்கினை அடித்து வெற்றிக்கிண்ணத்தினை தமதாக்கிக்கொண்டது. தாம் பங்கேற்ற முதல் உலகக்கிண்ண போட்டியில் இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகி உலகத்தமிழர்களின் இதயங்களில் நீங்கா இடத்தினைப்பெற்று தமிழீழ மகளிர் உதைபந்தாட்ட அணி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது



2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ மகளிர் உதைபந்தாட்ட அணி கலந்து கொண்ட முதலாவது உலகக்கிண்ணப் போட்டியில் இறுதியாட்டத்திற்கு தெரிவாகி வரலாற்று சாதனை படைத்துள்ளது. இச் சாதனையினை படைப்பதற்கு எமக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் முக்கியமாக, நோர்வே ஒஸ்லோவில் பயிற்சி முகாமிற்கான அனைத்து ஒழுங்குகளையும் நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக்குழு விளையாட்டுத்துறை, தமிழ் இளையோர் அமைப்பு நோர்வே மற்றும் விளையாட்டுக்கழகங்கள், ஆதரவாளர்கள் என அனைவரும் சிறப்பாக வழங்கி இருந்தனர்



மேலும் ஏழு நாடுகளில் இருந்தும் வருகை தந்த விளையாட்டு வீராங்கனைகளுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளை செய்து தந்த அந்தந்த நாட்டு விளையாட்டுத்துறை, உதைபந்தாட்டசம்மேளனம், நன்கொடையாளர்கள், ஊடகங்கள், ஊடகத்துறை நண்பர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி.



சிறப்பாக கூறவேண்டுமெனில் பல்வேறு நாடுகளில் இருந்தும் வருகைதந்த வீராங்கனைகளைஒருவாரகாலத்திற்குள்உலகக்கிண்ண போட்டிக்கு தயார்ப்படுத்திய எமது பயிற்சியாளர்திரு தீபன், உதவிப்பயிற்சியாளர்கள் திரு எழில், திரு சுஜன் அணி மேலாளர் திருமதி சங்கரி, உதவி அணி மேலாளர் அஜனி, அணி மருத்துவ மேலாளர் அபிராமி, மகளிர் அணி மீடியா மேலாளர் சௌம்யா நேரடியாக நோர்வே வருகைதந்து உற்சாகப்படுத்திய ஆதரவாளர்கள் மற்றும், அணியின் வெற்றியினை தங்கள் ஒவ்வொருவரின் வெற்றியாக எண்ணி உலகத் தமிழர்கள் அனைவரும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

சர்வதேச தரத்திலான சுற்றுப்போட்டி ஒன்றில் பங்கேற்ற ஏனைய நாடற்ற இனங்களைப் போல தமிழீழ தேசத்திற்கும் வாய்ப்புக் கிடைத்தமை சிறந்ததொரு களமாகவே தமிழீழ மக்கள் கருதுகின்றனர்.

கலை, கலாச்சாரம், விளையாட்டு போன்றவை ஒரு தேசத்தின் ஆத்மாவை வெளிப்படுத்தும், வளப்படுத்தும் விடயங்கள் ஆகும். அந்த வகையில் விளையாட்டின் மூலம் தமிழீழத்தின் ஆத்மாவை உலக அளவில் வெளிப்படுத்த CONIFA மிகப்பெரிய இடத்தை தமிழீழ தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வழங்கியிருக்கிறது.

எமது அணியின் சீருடைகளை வாங்கவும் எமது அணிக்கு உங்கள் அன்பளிப்புகளை வழங்கவும் https://tamileelamfa.net/donate/ என்ற எமது இணையதளத்தினை பார்வையிடவும்

**ஊடகப்பிரிவு**
தமிழீழ உதைபந்தாட்ட சம்மேளனம்

# நோர்வே சுவிடனில்

## தாய்மொழிகளுக்கான முன்னுரிமை - கல்வியிலும் அன்றாட வாழ்க்கையிலும்

ஸ்கண்டிநேவியன் நாடுகள் அல்லது நார்டிக் நாடுகள் என்றழைக்கப்படும் நார்வே, சுவீடன், டென்மார்க் மற்றும் ஃபின்லாந்து நாடுகளில் அவரவர் நாட்டின் தாய்மொழிக்கான முக்கியத்துவம் மட்டுமின்றி புலம்பெயர்ந்து வந்தோருக்கான தாய்மொழிகளுக்கும் சம அளவில் அங்கீகாரமும் முக்கியத்துவமும் தந்து அனைத்தையும் பேணிக்காக்க உதவுகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளின் மொழிச்சட்டங்களும், தங்கள் நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினருக்கான அங்கீகாரத்தினை 'சிறுபான்மையினர் மொழியுரிமைச்சட்டம்' வழியாகவும் இடம்பெயர்ந்தோ அகதிகளாக வந்தோருக்கான மொழியுரிமையை, 'மொழியியல் மனித உரிமைச்சட்டம்' வழியாகவும் அங்கீகரிக்கின்றது.

**நார்வே நாட்டில் தமிழ்மொழிக் கருத்தரங்கம்:**

நான் நார்வே நாட்டின் அன்னைபூபதி தமிழ்க்கலைக்கூடத்தில் 7 ஆண்டுகள் தமிழ் மற்றும் அறிவியல் ஆசிரியராக பணிபுரிந்துள்ளேன். அந்த காலக்கட்டத்தில் தான் ஒவ்வொரு வருடமும் தாய்மொழிக் கல்விக்கான கருத்தரங்கினை நார்வே அரசு தங்கள் நாட்டில் வசிக்கும் கல்விக்கற்கும் மொழியினருக்கான வலுவூட்ட பன்னாட்டுக் கருத்தரங்கங்களை நடத்தத் தொடங்கியது.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு மாநில/பிராந்திய உள்ளூர் நிர்வாகங்கள் பொறுப்பேற்று நடத்தும் இக்கருத்தரங்கில் கலந்துக்கொள்ள தமிழ் உள்ளிட்ட பல மொழிகளில் பள்ளி, வகுப்புகள் நடத்தும் ஆசிரியர், ஆசிரியைகளுக்கான பயணச்செலவு, ஒவ்வொரு மொழிக்குமென அளிக்கப்படும் பன்னாட்டு அறிஞர்களுக்கான செலவுகள், தங்கும் விடுதிக்கான செலவு, மற்றும் கருத்தரங்கம் நடத்த நட்சத்திர விடுதி என பிரமாண்டமாக நடக்கும்.



2010 நான் முதன் முதலில் பேர்கன் நகரத்தில் அப்படியொரு கருத்தரங்கில், தமிழர் வரலாறு தொடர்பான உரை நிகழ்த்தினேன், சிறு நாடகமும் நடத்தினோம். நார்வே நாடு முழுமைக்கும் இருந்து தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர், ஆசிரியைகள், இலங்கை மற்றும் மலேசியாவில் இருந்து அறிஞர்களும் வந்திருந்தனர்.

அதன் பின், 2014இல் ஸ்டாவாங்கர் என்ற இடத்தில் நடத்த மொழியியல் கருத்தரங்கிற்கு நாங்கள் அனைவரும் விமானத்தில் சென்று நட்சத்திர விடுதியில் தங்கி நார்வே நாட்டில் தமிழ்க்கல்வி வளர்ப்புத் தொடர்பான நிகழ்வுகளில் கலந்துகொண்டோம். முதல் நாள் கருத்தரங்கில் 15ற்கும் மேற்பட்ட மொழியினர் கலந்துகொண்ட கூட்டு நிகழ்வு நடந்தது. அதில், நார்வே நாட்டில் பிறந்து வளரும் பிற மொழியினருக்கு தாய்மொழிக் கல்வியையும் நார்வேஜிய மொழிக் கல்வியையும் வழங்குவது தொடர்பான பயிற்சிகளை நார்வேஜிய மொழியியல் மற்றும் கல்வியியல் அதிகாரிகள் எங்களுக்கெல்லாம் வழங்கினர்.

இரண்டாம் நாள் கருத்தரங்கில், ஒவ்வொரு மொழியினருக்கும் தனித்தனி அரங்கங்கள் அதே நட்சத்திர விடுதியில் ஏற்பாடுசெய்யப்பட்டு, அவரவர் மொழி வளர்ச்சித் தொடர்பான பயிற்சிகளும் வாத-விவாதங்களும் நடந்தன.

மொழிகளுக்கு மட்டுமல்ல, நார்வே நாட்டில் வாழும் பல்வேறு இனப்பிரிவினரும் அவரவர் பண்பாட்டினைப் பேணிக் காக்கவும் வளர்க்கவுமென நடத்தப்படும் மாநாடுகள், விழாக்களுக்கும் நார்வே நாட்டில் நிதி உதவி கிடைத்து வருகிறது.



முனைவர் விஜய் அசோகன்,
கல்வியாளர்

**அறிவியல், கணிதப் பாடங்களில் தமிழ்:**

தாய்மொழிகளுக்கான கல்வி வளர்ச்சிக்கென நார்வே அரசு morsmal.no என்ற இணையப் பக்கத்தையும் செயல்படுத்தி வருகிறது. இதில், தமிழுக்கான பக்கங்களில் நார்வே அரசு நடத்தும் மேல்நிலை வகுப்பிற்கான தமிழ்ப்பாடத் தேர்வுக்கான பயிற்சி நூல்களும் முந்தைய ஆண்டு வினாத் தாள்களும் கிடைக்கும். அதோடு, நார்வே அரசுப் பள்ளியில் பயிலும் தமிழ் மாணவ, மாணவியரின் தாய்மொழிக் கல்விப் பயிற்சிக்காக, கணிதம், சமூக அறிவியல் உள்ளிட்டப் பாடங்களுக்கான சில பகுதிகளும் தமிழில் கிடைக்கிறது.

ஒரு தமிழனாக, "ஏதோ ஒரு மூலையில், ஏதோ ஒரு நாட்டில் தமிழ் வளர்க்க நமக்கு எவ்விதத் தொடர்பும் இல்லாத ஏதோ ஒரு அரசு செலவு செய்து ஊக்கப்படுத்துகிறார்களே" என்ற பெருமிதமும் ஒரு சராசரி மனிதனாக, "அனைத்துத் மொழியினரையும் மதித்து அவரவர் தாய்மொழிகளுக்கான வளர்ச்சிக்கு நாமும் உதவ வேண்டும் என்ற அறம்சார் பாடமும் கற்க முடிந்தது.

**நார்வே நாட்டில் நூல்களும் கையேடுகளும் தமிழில்:**

நார்வே நாட்டிற்கு நான் வருவதற்கு முன்பே நார்வேஜிய-தமிழ் அகராதி ஒன்றினை அரசின் நிதியுதவியில் பேராசிரியர் தயாளன் அவர்களும் திரு ஹேமச்சந்திரன் அவர்களும் பதிப்பித்து இருந்தார்கள். விளையாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் தமிழ் கையேடுகள் பதிப்பிக்கவும் அரசு நிதி உதவி கிடைக்கிறது.

மகப்பேறு காலங்களில் உடல்நலன் பேணல், குழந்தை வளர்ப்பு, பல்துலக்குதல் தொடர்பான கையேடுகள் தமிழ் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் அச்சிடப்பட்டு இருந்ததைப் பார்க்கும்பொழுது ஆச்சர்யமாக இருந்தது.

2009ற்கு பிறகு, நார்வேஜிய மருத்துதுறைக்கான தமிழ் கையேடுகளில் ஒன்றான, நீரிழிவு நோய் விழிப்புணர்வுக் கையேட்டினை தமிழ் தட்டச்சு செய்யும் பணியையும் மருத்துவர் சிவகணேசன் உள்ளிட்டக் குழுவினரோடு இணைந்து நானும் பங்களித்து மகிழ்ந்தேன்.

அதோடு, மருத்துவம் சார்ந்த எவ்வித நடவடிக்கைகளுக்கும் ஒவ்வொரு மொழியினரும் தங்கள் தாய்மொழியைச் சார்ந்த மொழிப்பெயர்ப்பாளரை உடன் வைக்க கோரிக்கை வைக்க முடியும். அம்மொழிப்பெயர்ப்பாளருக்கான செலவினை அரசே ஏற்றுக்கொள்ளும்.



என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவரின் தனிப்பட்ட அனுபவத்தினையும் இங்கே பகிரலாம் என்று இருக்கிறேன். என்னுடைய நண்பரின் தந்தை ஒஸ்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார், அவருக்கும் ஆங்கிலமும் சரிவரத் தெரியவில்லை, நார்வேஜிய மொழியும் தெரியாது. அவரை கவனித்துக் கொள்ளும் தலைமைச் செவிலியர் என் நண்பரிடம் உதவிக்கேட்டு, "சாப்பிடுறீங்களா?, வலிக்குதா?, கழிவறை செல்ல வேண்டுமா? மருந்து வேண்டுமா? வீட்டில் யாருடனேனும் பேச வேண்டுமா?" உள்ளிட்டச் சொற்களை கற்றுக்கொண்டு அதனை ஆங்கில எழுத்திலும் நார்வேஜிய எழுத்திலும் தமிழ் உச்சரிப்புப் புரிந்துக்கொள்ள ஏதுவாக பெரிய தாளில் அச்சிட்டு நண்பரின் தந்தையின் கட்டில் அருகே ஒட்ட வைத்துள்ளார்.

**மருத்துவக் கல்வியும் நோர்வேயில் தாய்மொழி மதிப்பெண்ணும்:**

நோர்வே நாட்டின் பள்ளிக்கூட மேல்நிலை வகுப்பில், இயற்பியல், வேதியியல், உயிரியியல், கணிதம் உள்ளிட்ட பாடப்பிரிவுகளோடு, சர்வ தேச மொழிகள் (ஜெர்மன், ஃபிரெஞ்சு, ஸ்பானியம், தமிழ், பெர்சியம், அரேபியம் உள்ளிட்ட மொழிகளில்) ஒன்றை மாணவ, மாணவியர்கள் தேர்ந்தெடுத்து தேர்வெழுத வேண்டும். மேல்நிலை வகுப்பு மூன்று ஆண்டுகளிலும் இந்த மொழிப்பாடங்களில் ஒன்றில் தேர்வெழுதினால், இயற்பியல், வேதியியல், கணிதம், உயிரியியல் பாடங்களில் மதிப்பெண் குறைந்திருந்து, இம்மொழிப் பாடத் தேர்வில் மதிப்பெண் அதிகமாக வாங்கியிருந்தால், மருத்துவம்/பொறியியல் சேர்க்கைக்கான கூட்டுமதிப்பெண்ணில், குறைந்த மதிப்பெண் வாங்கிய பாடத்தை நீக்கிவிட்டு மொழிப்பாட மதிப்பெண்ணை சேர்த்துக்கொள்ளலாம்.

அதாவது, நோர்வே நாட்டினில் தமிழ் மொழி பாடத்தில் பெறும் மதிப்பெண், நோர்வே நாட்டின் மருத்துவக் கல்வி நுழைவிற்கு உதவுகிறது. சமீபத்தில் நோர்வே நாட்டினில் மருத்துவக் கல்வியியல் சேர்ந்த தமிழர்களின் எண்ணிக்கை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## காசா திறந்தவெளி சிறைச்சாலை வீரத்தின் விளைநிலமானதால்

# வேகம்பெறும் உலக ஒழுங்கு (World Order) மாற்றம்

**பாகம் 1**

உச்சம் தொடும் மூட நம்பிக்கைகள் எல்லாம் மதத்தின் பெயரால் முன்வைக்கப்படும் போது புனிதம் பெற்ற நம்பிக்கையாக மாறி விடுகிறது. தேசியம் அதில் கலக்கும் போது மூர்க்கமான வெறியாக அது மாறிவிடுகிறது. ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழலில் இதே மதம்பிடித்த தேசியவாதம் முற்போக்கான வரலாற்று பாத்திரத்தையும் வகித்துவிடுகிறது.



காசாவில் நடந்து கொண்டிருப்பது இதுவும் தான். ஆனால் அதுமாத்திரமல்ல. ஏகாதிபத்திய வல்லரசுகளின் நலன்களுக்கு இத்தகைய மதம் பிடித்த தேசியவாதம் பயன்படுத்தப்படும் போது மனிதம் கண்ணீர் வடிப்பதைத்தான் காசாவில் நடைபெறும் கொடூரம் உணர்த்துகிறது.

### மதத்தால் புனிதம் பெற்ற மூடநம்பிக்கைகளின் மனிதத்துக்கான அச்சுறுத்தல்

இதுவரை தத்துவார்த்தரீதியில் கூறியதை எளிமையாக கூறுவதெனில் இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம். கற்காலம் முடிவடைந்து வெண்கலக் காலம் இன்னும் தொடங்கியிராத - இன்னும் பகுத்தறிவு பக்குவம் பெறாத - சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னால் ஆப்ரகாம் என்ற இறைத்தூதர் தோன்றியதாகவும் அவர்கள் தூய்மையான கலப்பில்லாத வம்சாவளியாக - கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே மத-இனமான தமது புனித பூமி இஸ்ரேல் என - அறிவியலுக்கு அப்பால்- யூதர்கள் நம்புகிறார்கள்.



'இழக்கப்பட்ட இஸ்ரேல் மண்ணை மீட்பதற்காக' தன்னுயிரையும் தர அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஏனெனில் அது அவர்களது மத-தேசிய கடமை எனவும் அதற்காக உயிர் நீத்தால் கடவுள் அவர்களுக்கு சொர்க்கத்தில் பரிசளிப்பான் எனவும் அவர்கள் நம்புகிறார்கள். வேடிக்கை என்னவென்றால் யூதமதம், கிறிஸ்தவமதம், இஸ்லாமிய மதம் இவை மூன்றுமே ஆபிரகாம் என்றொருவரை தமது மூத்த இறைதூதராக நம்புகின்றனர். அதேசமயம் தத்தமது மதங்களே சரியானது உயர்வானது, தாமே கடவுளால் தேர்நதெடுக்கப்பட்டவர்கள், மற்றவர்கள் பாவிகள், சொர்க்கத்துக்கு போகமாட்டார்கள், தமது மத நம்பிக்கைக்கு எதிரானவர்கள், அவர்களை 'புனித யுத்தத்தில்' கொல்வது கூட புண்ணிய காரியம் என திடமாக நம்புகிறார்கள். இதைவிட கிறிஸ்தவர்களில் கணிசமானோர் இஸ்ரேல் என்ற நாடு ஜெருசலத்தை மையமாகக் கொண்டு 'மீளுருவாவது' ஜேசுவின் இரண்டாவது வருகைக்கான முன்நிபந்தனை என கருதுகிறார்கள். அமெரிக்கா போன்ற கிறிஸ்தவ நாடுகளில் இஸ்ரேலுக்கு இருக்கும் ஆதரவு இந்த மத நம்பிக்கையில் இருந்தே பிறக்கிறது.



பி. ஏ. காதர்

இத்தகைய மத நம்பிக்கைகளை ஏகாதிபத்தியங்களும் அரசுகளும் தமது நலனுக்காக பயன்படுத்தி பிறநாடுகளினதும் பிற சமூகங்களினதும் வளங்களையும் செல்வங்களையும் கொள்ளையடித்த இரத்தக்கறைப் படிந்த அத்தியாயங்களால் நிரப்பப்பட்டதுதான் மனிதகுலத்தின் பெரும்பாலான வரலாறாகும். மதவாதத்தில் தேசியவாதத்தை கலந்து பயன்படுத்துவதன் கோரமுகத்தை காசாவில் இப்போது பார்க்க முடியும். காசாவில் இதுவரை கண்டிராத கொடூரம் நடக்கிறது என்றால் அதற்குக்காரணம் யுத்தக்கருவிகள் மிகவும் நவீனமாகிவிட்டன முன்னர் வாளினால் நடந்த கொடூரம் இன்று ஆளில்லா விமானங்களாலும் ஏவுகணைகளாலும் தன்னியக்க துப்பாக்கிகளாலும் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதும் அதன் பின்னணியில் நவீன அமெரிக்கா ஏகாதிபத்தியம் இருப்பதும்தான். காசா மக்கள் நடத்துகின்ற போராட்டம் - அதன் தலைமைகள் எத்தனை பிற்போக்கானதாக இருந்தாலும் - தமது மண்ணுக்காகவும், தமது வாழ்வுரிமைக்காகவும் அனைத்துக்கும் மேலாக ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் இருப்பதால் அவர்களது தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும் முற்போக்கானது.

### இஸ்ரேலை உருவாக்குவதில் பிரித்தானியாவின் பாத்திரம்

இஸ்ரேல் என்ற நாட்டை-பகுத்தறிவுக்கு முரணான-மதபுனைவின் அடிப்படையில் உருவாக்கும் எண்ணம் அப்போது சூரியன் அஸ்த்தமிக்காத சாம்ராச்சியத்தைக் கொண்டிருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு ஏற்பட்டதற்கு காரணம் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஹிட்லரினால் யூதர்களின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இன ஒழிப்பின்னால் ஏற்பட்ட அனுதாபமல்ல. அதற்கு வெகு காலத்துக்கு முன்னமே, முதலாம் உலக மகாயுத்தத்தின் போதே அதற்கான திட்டம் உருவாகிவிட்டது.



யூதர்களுக்கென ஒரு தனியான அரசு ஜெருசலத்தை மையமாகக் கொண்டு பலஸ்தீனத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முதன் முதலாக முன் வைத்தவர் வியன்னாவில் வாழ்ந்த ஒரு யூத பத்திரிகையாளர். அவரது பெயர் தியோடர் ஹேர்சல் *(Theodor Herzl)*. இவர் 1896 ல் எழுதிய 'யூத அரசு' *(Der Judenstaat)* என்ற நூலில் யூதர்கள் தம்மைப்பாதுகாத்துக் கொள்வதற்கு தமக்கென தனியான ஒரு அரசு தேவை என்ற கருத்தை முன்வைத்தார். அக்காலத்தில் 1900 ஆண்டின் போது பலஸ்தீனத்தின் சனத்தொகையில் 96 சத வீதத்தினர் பலஸ்தீன அராபியர்கள் 4சத வீதத்தினரே பலஸ்தீன யூதர்கள்.

### மத்திய கிழக்கு நாடுகளின் முக்கியத்துவம்

முதலாம் உலக மகாயுத்தத்தின் போது துருக்கி-ஒட்டோமன்சம்ராச்சியத்தை வீழ்த்துவதற்குதமக்கு சார்பாக கிளர்ச்சி செய்வதற்காக அராபியர்களுக்கு சுதந்திரம் வழங்குவதாக 1915 *(Husayn-McMahon Correspondence )* உறுதி கூறிய பிரித்தானியா இரகசியமாக யூதர்களின் பலஸ்தீனத்தில் மீதுள்ள தாயக உரிமையை அங்கீரிப்பதாக *(1917 Balfour Declaration)* வாக்குறுதியளித்தது. மறுபுறத்தில் அராபியர்களின் முதுகுக்குப் பின்னால் திரைமறைவில் ஒட்டோமன் சாம்ராச்சியத்தை தமக்குள் பகிர்ந்து கொள்வதற்கான சைகியஸ் பைகொட் ஒப்பந்தத்தை *(1916 Sykes – Picot Agreement)* பிரான்சுடன் செய்து கொண்டது. இவ்வாறிருக்கையில் 1917 அக்டோபர் சோசலிச புரட்சியின் மூலம் ரஷ்யாவில் ஆட்சிக்கு வந்து போல்ஷ்விக் அரசாங்கத்தால் அம்பலப்படுத்தப்பட்ட போது பிரித்தானியாவும் பிரான்சும் தர்மசங்கடத்துக் குள்ளாயின. அதன் பின்னர் அராபியர்களை திருப்திபடுத்துவதற்காக பலஸ்தீன யூதர்களின் தாயக உரிமை என்பது யூதர்கள் இன்றிருப்பதைப் போல் தொடர்ந்தும் வாழ்வதற்குரிய உரிமையை மாத்திரமே தனது பல்போர் பிரகடனம் குறிக்கிறது என விளக்களித்த அதே வேளை சியோனிஸ்ட்டுகளுக்கு இஸ்ரேலை உருவாக்குவதற்கு உதவுவதாக இரகசியமாக கூறியது *(1922 The Churchill White Paper, 1922)*.



இவ்வாறு முதலாம் உலக மகாயுத்தம் முடிவுற்ற பின்னர் அப்போது உருவாக்கப்பட்டிருந்த - தற்போதைய ஐ.நாவின் முன்னோடியான உலக சபை- *League of Nations-* மேற்படி ஒப்பந்தப்பந்தத்தின் அடிப்படையில் 1923 செப்ரெம்பர் 29ந் திகதி பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கும் பிரான்ஸ் ஏகாதிபத்தியத்திற்கும் அதிகார பிராந்திய - 'மென்டேட்' *(mandate)* - நாடுகள் என்ற பெயரில் மத்திய கிழக்கை பிரித்துக் கொள்ள அனுமதியளித்தது. இதன்படி லெபனானும் சிரியாவும் பிரான்சுக்கு வழங்கப்பட்டது. பலஸ்தீனம் - இன்றைய ஜேர்தான் இஸ்ரேல் மேற்குகரை *(West Bank)* பிரதேசங்கள் - பிரித்தானியாவுக்கு வழங்கப்பட்டது. அதன்பின்னரே மத்திய கிழக்கில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

### தமிழ் பொது ... தொடர்ச்சி ...

செய்திருக்கின்றார்கள். இந்தப் பயணத்தில் ஈழத் தமிழர்கள் எந்தப் பயனையும் அடையவில்லை என்பதனால், ஒரு புதிய – தந்திரோபாயமான வழிமுறையை அவர்கள் சிந்திப்தென்பதை அந்த வார்த்தைக்குள் அடக்கிவிடலாமா என்பது முக்கியமான ஒரு அம்சம்.

**பொது வேட்பாளர் என்ற விடயத்தின் பின்னணியில் தமிழ் சிவில் சமூகத்தினரின் பங்களிப்பு பிரதானமாக இருக்கின்றது. இந்த சிவில் சமூகங்களின் பங்களிப்பை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் அரசியல் கட்சிகளுக்குப் பின்னால் பயணம் செய்திருக்கின்றார்கள். அவர்கள் நம்பிக்கையுடன் அந்த அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளைச் செவிசாய்த்திருக்கின்றார்கள். போரை நடத்திய சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்திருக்கின்றார்கள். மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்திருக்கின்றார்கள். சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்திருக்கின்றார்கள்.

இவ்வாறு அனைத்துத் தளங்களிலும் அந்தவகையான சாதகமான நிலையும் ஏற்படவில்லை என்ற எண்ணத்துடன்தான் சிவில் அமைப்புக்கள் கூட்டியைவாகச் செயற்படவேண்டிய தேவை எழுந்திருக்கின்றது

### ஐரோப்பிய ... தொடர்ச்சி ...

கப்பட்ட சுயாதீன விசாரணைக் குழுவினரே இந்த விசாரணைகளை மேற்கொண்டதாக அது கடந்த புதன்கிழமை(12) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள், செய்மதி படங்கள், தடயவியல் நிபுணர்களின் ஆய்வு அறிக்கைகள், நேரில் பார்த்தவர்களின் சாட்சியங்கள் மற்றும் மருத்துவ அறிக்கைகள் ஆகியவற்றினை உறுதிப்படுத்திய விசாரணைக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

மக்களை நீதிக்குப் புறம்பாக படுகொலை செய்தல், கூட்டமாக படுகொலை செய்தல்இ மக்கள் குடியிருப்புக்களை தாக்குதல், உணவை ஆயுதமாக பயன்படுத்துதல், மருத்து வமனைகளை தாக்குதல் போன்ற பேர்க் குற்றங்களுக்கு இஸ்ரேலிய அரசு கார ணம் என்பதுடன், அதன் அதிகாரிகள் வெளிப் படையாக தெரிவித்துவரும் கருத்துக்களும் வன்முறையை தூண்டுபவை என்பதுடன், குற்றமாகும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காணி, பொலிஸ்... தொடர்ச்சி ...

கின்றார். அதில் என்ன கொடுக் கப் போகின்றார். காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப் போகின் றாரா? அந்த அதிகாரங்கள் அனை வருக்கும் சமமானதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாகாணத் திற்கென தனித்தனி அதிகாரங்கள் இருக்க முடியாது. இதனால் வீண் பேச்சுக்களைவிடுத்து கொள்கைபிரகடனங்களை வெளியிடுங்கள். மக்கள் எப்போதும் ஏமாற்ற முடியாது. அது இலகுவானது அல்ல'' என்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த மேர்வின் சில்வா, ''பொலிஸ் அதிகாரங்களை வழங்கு வதற்கு நாங்கள் உயிருடன் இருக்கும் வரையி லும் எவருக்கும் இடமளிக்க மாட்டோம் என்பதனை கூறிக்கொள்கின்றேன். எவராவது வழங்க தயாரானால் வீதிக்கு இறங்குங்கள். நாங்கள் இரத்தம் சிந்தியாவது இந்த நாட்டை பாதுகாப்போம்'' என்றும் கூறினார்.

### இந்தியாவின் ... தொடர்ச்சி ...

தலைவர் பவன் கல்யாணும் மேலும் 23 பேரும் அமைச்சர்களாக இதன் போது பதவியேற்றனர்.

ஆந்திர மாநிலத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவை மற்றும் மக்களவை தேர்தலில் தெலுங்கு தேசம் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அமோக வெற்றி பெற்றது. மொத்தம் உள்ள 175 சட்டப்பேரவைத் தொகுதி களில் 164 தொகுதிகளில் இக்கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

இதனை தொடர்ந்து கூட்டணி கட்சிகளின் சட்டமன்ற அவை தலைவராக சந்திரபாபு நாயுடு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

நிறுவனங்களின் தீவிர ஆதரவாளரான நாயுடு நகரங்களை நிர்மாணித்தல் மற்றும் தொழிற்சாலைகளை நிறுவுதல் போன்ற வற்றிற்கே முன்னுரிமை கொடுத்து வந்திருந்தார். எனினும் இந்த தேர்தலில் அவர் விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதாக வாக்களித்து வெற்றி பெற்றுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

### குதீஸ் அமைப் ... தொடர்ச்சி ...

தெரிவிக் கப்படுகின்றது. எனினும் உயிரிழப் புக்கள் மற்றும் காயங்கள் குறித்த தகவல்கள் வெளியிடப் படவில்லை.

காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல் களுக்கு எதிராக கடந்த நவம்பர் மாதம் முதல் குதீஸ் அமைப்பினர் செங்கடிலில் இஸ்ரேல் மற்றும் அதன் போருக்கு ஆதரவுகளை வழங்கும் நாடுகளின் கப்பல்களைத் தாக்கி வருகின்றனர். அமெரிக்க மற்றும் பிரித்தானிய வான்படையினர் குதீஸ் அமைப்பினரின் தளங் களைத் தாக்கியபோதும் ஹதீஸ் அமைப் பினர் தொடர்ந்து கப்பல்களைத் தாக்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதுவரையில் அவர்கள் நூறுக்கு மேற்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இதுவரையில் இடம்பெற்ற தாக்குதல்க ளில் அவர்கள் ஒரு கப்பலை மூழ்கடித்ததுடன், இஸ்ரேலுக்கு சொந்தமான மற்றுமொரு கப்பலை கடத்திச் சென்றிருந்தனர். தற்போது இடம்பெற்ற தாக்குதலில் ஈளில்லாத கடற்கலம் மோதியதால் கப்பல் கடுமையாக சேதமடைந்துள்ளதாக அமெரிக்காவின் மத்திய கட்டளை மையம் தெரிவித்துள்ளது.

### விலாங்கு மீன்... தொடர்ச்சி ...

தடவிக்கொடுக்கும் மென்போக்கு வெளியுறவுக் கொள்கைவாதிகளின் சிந்தை வெளிக்குள்ளும் தமிழ் மக்களின் தலைவிதிக்கான வழியை தேட முயற்சிக்கும் அரசியல் வெறுமையின் அவலமான சாட்சியங்களே இவையன்றி வேறென்ன?

தமிழ் மக்களை தேசமாக அணிதிரட்டும் காலத்தின் கட்டளையை நிறைவேற்றிட பாடு படாது, தத்தமது நிலைப்பாடுகளின் வழியே சுயநலன்சார் இயங்குதலின் மூலம் இவ்வாறாக மீண்டும் முருங்கை மரத்திலேறக் காத்திருக்கும் தமிழ் கட்சிகளின் நிலைப்பாடானது தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்துருவாக்கம் அல்லது சிந்தனையினை முட்டுச் சந்தில் நிறுத்தியுள்ளதோடு கானல் நீராகி தமிழர்களது அரசியல் மீட்சி எனும் கடும்வறட்சி ஏற்படுத்தியதாகத்தைதீர்க்காமலேயே காற்றோடு கரைந்து போகும் அவலம் 2024 இலும் தொடர்கதையாகத்தான் போகின்றது.

**முற்றும்**

### காசா திறந்த ... தொடர்ச்சி ...

உலகபடத்தில் அதுவரையில்லாத புதிய நாடுகள் ஏகாதிபத்திய தேவைக்காக செயற்கையான முறையில் உருவாக்கப்பட்டன. தற்போது 23 அரா பிய நாடுகளும் அராபியர்கள் அல்லாத ஈரானும் இஸ்ரேலும் இங்குள்ளன.

**தொடரும்**

### பொது வேட்பாள ... தொடர்ச்சி ...

கட்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஆழமான கலந்துரையாடல்கள் நடத்தப் பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, ஈபிஆர்எல்எப், ரொலோ, புளொட் உட்பட பல்வேறு கட்சிகளும் அமைப்புகளும் இந்த கலந்துரையாடல்களில் கலந்துகொண்டன. இந்தப் பின்புலத்திலேயே அனந்தி சசிதரன் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

இதேவேளையில் விவாஜிலிங்கம் தானும் தமிழ்ப் பொது வேட்பாளராக களமிறங்க தயாராக இருப்பதாக இரண்டு தினங்களுக்கு முன்னர் அறிவித்தார்.

### ஊடவியலாளர் ... தொடர்ச்சி ...

சைக்கிள் மற்றும் ஓட்டோ உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்க ளால் தாக்கப்பட்டதுடன் தீ வைத்தும் கொளுத் தப்பட்டன. அதனால் சுமார் 10 இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டமேற்படுத்தப்பட்டது.

''திருநங்கைளைத் தவறாக சித்தரிக்காதே'' என அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் தாக்கு தல் நடத்தப்பட்ட வீட்டில் போடப்பட்டிருந்தன. இந்நிலையில், நேற்றுக் காலை பொலிஸாரின் தடயவியல் பிரிவினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து தடயங்களைச் சேகரித்தனர்.

அத்துடன் பொலிஸ் விசேட கைரேகை நிபுணர்கள், பொருள்கள் மற்றும் வாகனங்களை எரிக்கப் பயன்படுத்திய பெற்றோல் கொண்டு வரப்பட்ட கொள்கலனை கைரேகை பரிசோத னைக்கு உட்படுத்தியபோது இருவரின் கைரேகை அடையாளங்கள் கிடைக்கப் பெற்றன. வன்முறையில் ஈடுபட்ட கும்பல் வீதியூடாக தப்பிச் சென்ற சி.சி.ரி.வி. காணொளிகள் பொலிஸாருக்குக் கிடைத்தன. இவற்றைக் கொண்டும் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வகுமார் இந்தக் தாக்குதலுக்குக் கண்ட னம் வெளியிட்டதுடன் சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### சீனாவும் ... தொடர்ச்சி ...

தூதரகம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடு களுடன் நீண்டகாலமாக இருக்கும் பிரச்சனை களைத் தீர்ப்பதே தமது முதன்மையான நோக்கம் எனஇந்தியாதெரிவித்துள்ளது.அதற்குபதிலழித்த சீனா, இரு நாடு களுக்கும் இடையிலான உறுதியான உறவு கள் அந்த பிராந்தியத்தின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் உகந்தது எனவும், சரியான திசையில் நல்லுறவுகளை வளர்ப்பதற்கு தாம் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது.

மூன்றாவது தடவையாக பதவியேற்றுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மேடிக்கு சீன பிரதமர் லி குயாங் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் 3440 கி.மீ எல்லைப் பகுதி உள்ளது. இந்த எல்லைப் பகுதியில் 2020 ஆம் ஆண்டு மோதல் ஒன்றும் இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்டிருந்தது.

### நில அபகரிப்பை ... தொடர்ச்சி ...

அரசியல் அரச இயந்திரத்தை தமிழ் மக்கள் ஒரு போதும் நம்பவில்லை என்றும் தமிழ் மக்களுக்கு இதன் மூலம் அதாவது தொடர்ந்தும் அடக்குமுறை காணப்படு கின்றது தொடர்ந்து அநியாயங்கள் காணப்படுகின்றது தமிழ் மக்களினுடைய சொத்துக்கள் அபகரிக்கப்படுகின்றது காணிகள் அபகரிக்கப்படுகின்றது.

**தொடரும்**

### இழுபறி நிலை... தொடர்ச்சி ...

கூடுமென்றும் வலியுறுத்தல்கள் இருந்து வருகின்றன. அத்தோடு ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புக்களால் நாடளாவிய ரீதியில் உள்ள குடும்பங்கள் மத்தியில் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் 3.9 மில்லியன் மக்கள் ஓரளவு உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கும், சுமார் ஒரு இலட்சம் மக்கள் தீவிர உணவுப் பாதுகாப்பின்மைக்கும் முகங்கொடுத்திருப்பதாக கடந்த வருடம் மதிப்பிடப்பட்டிருந்தது.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், குறிப்பாக 0.25 - 2 ஹெக்டேயர் நிலப் பரப்பில் விவசாயம் மேற்கொள்ளும் குறுநில விவசாயிகள் மிகவும் மோசமாகப் பாதிப் படைந்திருப்பதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக குடும்பங்களின் மீது ஏற்படக்கூடிய எதிர்மறைத் தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய உணவு, நிதி மற்றும் மனிதாபிமான உதவி வழங்கல் செயற்றிட்டம் குறித்த பரிந்துரைகளும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. அத்தோடு கடந்த 2022 மே மாதம் மேற்கொள்ளப்பட மதிப்பீட்டின்படி உணவுப் பாதுகாப்பின்மை நிலை மிகவும் உயர்வாக காணப்படும் பிரதேசங்களில் பெருந்தோட்டப்பகுதி (42 வீதம்) முதலிடத்திலும், வடமாகாணம் (28 வீதம்) இரண்டாம் இடத்திலும், கிழக்கு மாகாணம் (23 வீதம்) மூன்றாம் இடத்திலும் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை உலக உணவுத் திட்டத்தின் 2023 ம் ஆண்டுக்கான வீட்டு உணவுப் பாதுகாப்புக்கான மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் இலங்கையில் உணவுப் பாதுகாப் பின்மையானது 2022 ம் வருடத்தைப் போன்றே தோட்டத்துறைகளில் உயர்ந்த மட்டத்தில் காணப் படுவதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் தோட்டத்துறையில் 51 வீதமான வீடுகளில் உணவுப் பாதுகாப்பின்மை காணப்படுவதாக தெரியவருகின்றது.

#### சமாளிப்பு உத்திகள்

2023 இல் உணவுப் பாதுகாப்பின்மையை அனுபவிக்கும் குடும்பங்களின் சதவீதம், மார்ச் மாதத்தில் 17 சதவீதம் முதலாக ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் 24 வீதம் வரை உயர்வடைந்துள்ளது. 2023 ம் ஆண்டின் இறுதியில் இந்த ஆண்டின் தொடக்கத்துடன் ஒப்பிடுகையில், சமாளிக்கும் உத்திகளை கடைபிடிக்கும் குடும்பங்களின் விகிதத்தில் சரிவு காணப்பட்டது. அவர்களின் உணவு நுகர்வு அளவுகள் இன்னும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன.

அத்தோடு 23 சதவீத ஆண் தலைமைத்துவ குடும்பங்களுடன் ஒப்பிடுகையில், 32 சதவீத பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறை கொண்டனவாக அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் 26 சதவீதமான குடும்பங்கள் போதிய உணவை உட்கொள்வதாகவும் உலக உணவுப் பாதுகாப்பு திட்டத்தின் அறிக்கை வலியுறுத்துகின்றது.

42 சதவீதமான குடும்பங்கள் உணவு அடிப்படையிலான சமாளிப்பு உத்திகளில் கவனம் செலுத்துவதோடு, பத்தில் நான்கு குடும்பங்கள் குறைந்தபட்சம் ஒரு வாழ் வாதாரத்தை சமாளிக்கும் உத்தியை பயன் படுத்துகின்றன. அத்தோடு குடும்பங்கள் மொத்த செலவில் 62 வீதத்துக்கும் அதிகமான தொகையை உணவுக்காக செலுத்துவதாகவும் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

பெருந்தோட்ட மக்களின் வறுமை நிலை அம்மக்களை சகல துறைகளிலும் ஆட்டம் காணச் செய்துள்ளது. உணவுப் பாதுகாப்பின்மைக்கும் இது உந்துசக்தியாக அமைந்திருக்கின்றது. இந்நிலையில் 'இலங்கையின் பெருந்தோட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் ஆகக் குறைந்த பட்சத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடியதான வாழ்க்கைத் தரத்திற்கும் கீழான நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களுடைய பிரச்சினை வறுமைப் பிரச்சினை என்று மாத்திரம் கூறிவிட முடியாது. அவர்களுடைய இன்றைய சமூக, பொருளாதார நிலைமையினை அவர்களுடைய நாடற்ற நிலை, இனப்பாகுபாடு, அரசியல் மற்றும் பாரபட்சம் போன்றவற்றுடன் இணைந்த காரணங்களுடன் தொடர்புபடுத்தியே விளக்க முடியும். நம்பிக்கையின்மை சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள் மறுக்கப்படுதல் என்பன சுயமரியாதையினையே அழித்து விடுவதுடன், தீர்க்கப்பட முடியாத சமூகப் பிரச்சினைகளை எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படுத்தும் ' என்று முன்னதாகவே புத்திஜீவிகள் சுட்டிக்காட்டி இருந்தமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

• • •

### நார்வே – சுவீட... தொடர்ச்சி ...

பெருகிவருகிறது. அதற்கு மிக முக்கியக் காரணமாக என் அனுபவத்தில் இருந்து பார்த்தால் கூட, எனக்கு தெரிந்த, நான் தமிழாராசிரியராக வகுப்பெடுத்த பலரும் தமிழால் உயர்வு பெற்றவர்களே!

**சுவீடனிலும் எங்கள் அனுபவம்:**

அதேபோன்று, ஏற்கனவே சுவீடனில் தாய்மொழிக் கல்வி மற்றும் தாய்மொழியிலான நேர்முகத் தேர்வுப் பற்றி முந்தையைக் கட்டுரையில் எழுதியிருந்தேன். மருத்துவத் துறையிலும் எங்களுக்கு சில அனுபவம் உண்டு.

பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் உடல்நலப் பரிசோதனை செய்யப்படும். அதற்கென ஒவ்வொரு வயதிற்கேற்ப எந்தந்தத் தருணங்களில் எவ்வித சிகிச்சைக்கு குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டும் பள்ளிகளிலும் அறிவிப்பார்கள், அரசின் மருத்துவத்துறையின் வீட்டருகே இருக்கும் மருத்துவமனைகளில் குறிப்பேடு வந்தடையும்.

சுவீடனில் வசிக்கத் தொடங்கிய காலத்தில், டோர்சுலாண்டா என்னும் பகுதியின் பள்ளியிலேயே செவிலியர் ஆலோசனைக்கென அவ்வப்பொழுது அழைப்பு வரும். பள்ளி வளாகத்திலேயே உடல்நலன் மற்றும் மனநல ஆலோசனைக்கென அப்பள்ளியில் தனிப் பகுதியும் செவிலியர் மற்றும் வருகைதரு மருத்துவரும் இருந்தனர். செவிலியரும் குழந்தைக்கு சுவீடிஷ் மொழி தெரியாதத் தருணங்களில் எங்களுடன் அமர்ந்து தமிழில் சில சொற்களைக் கற்றுக்கொண்டு எங்கள் மகனுக்கு சில விளக்கக்கங்களை அளித்தார்.

அதோடு, பல் மருத்துவமனை சிகிச்சைக் கென குழந்தைகளை அழைத்துச் சென்றபொழுது, அங்குள்ள மருத்துவர் எங்கள் தாய்மொழி தமிழ் என்பதை அறிந்து, எங்கள் குழந்தைகளை தமிழ் தெரிந்த கேரளப் பெண் மருத்துவருக்குப் பரிந்துரைத்து அவரிடமே மேலதிக தொடர் சிகிச்சைக்கு செல்ல உதவிப் புரிந்தார். குழந்தைகள் விசயத்தில் மொழியைக் கையாளுதல் தெரியாத மொழியில் தான் பேசுவதை அறம் சார்ந்து அவர் தவிர்ப்பதாகவும் தமிழ்த் தெரிந்த மருத்துவர் இவ்வளாகத்தில் உள்ளபொழுது அவரிடம் தொடர் சிகிச்சைக்குச் செல்வதே குழந்தைக்கும் ஆரோக்கியம் என சிரித்துக்கொண்டே விளக்கப் படுத்தினார். இதுவும் டோர்சுலாண்டா பகுதியில் அம்மூலட் பல் மருத்துவமனையில் நடந்த நிகழ்வு! இப்படியாக, எங்கள் குழந்தைகளுக்கு இயல்பாகவே தாய்மொழியின் மீதான பற்றிற்குக் காரணமாக நார்வே நாடும் சுவீடன் நாடும் அமைந்துவிட்டது.

எங்கள் இளைய மகனிடம் யாராவது ஆங்கிலத்தில் பேசினாலோ புரியாத சொல்லை ஆங்கிலத்தில் கூறிவிட்டாலோ, மிக தன் னம்பிக்கையுடன், "நான் இன்னும் ஆங்கில மொழியினைக் கற்கத் தொடங்கவில்லை, எனக்கு ஆங்கிலம் தெரியாது தமிழில் கூறுங்களேன்" எனச் சொல்லிவிடுவார். தமிழில் பேசுவதும் தமிழோடு வாழ்வதும் எவ்வித இடர்பாடையும் கொடுக்காத ஸ்கேண்டியனேவியன் நாடுகளில் வசிக்கிறோம் என்பதே பெருமைதான்!

• • •

### உலகில் 117 ... தொடர்ச்சி ...

அனைத்துலக நாடுகளின் எல்லைகளைக் கடந்து இடம் பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை கடந்த 2023 ஆம் ஆண்டு வரையில் 43.4 மில்லியனை எட்டியுள்ளது. சூடான் மற்றும் உக்ரைன் பகுதிகளில் இடம்பெறும் மோதல்களும் இதற்கு காரணம். பல நாடுகளில் அகதித் தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக காத்திருக்கும் மக்களின் எண்ணிக்கை 6.9 மில்லியனாக அதிகரித்துள்ளது. இந்த வருடத்தில் இது 26 விகித அதிகரித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



### தங்கள் இறைமை ... தொடர்ச்சி ...

இல்லையாவென மக்கள் ஆணையைப் பெற முயன்றுள்ளார். இதே நேரத்தில் நீண்டகாலமாகப் பின்னணியில் இருந்து வந்த பிரான்சின் சோசலிசக் கட்சி காலநிலை மாற்றம் குறித்த அதீத அக்கறை மிக்க கொள்கைகளும் மற்றும் ஐரோப்பிய மக்களின் வர்த்தகம் தொழிலாளர்கள் பாதுகாப்புக் குறித்த கொள்கைகளும் 14 வீதமான வாக்கு அதிகரிப்பை சோசலிசக் கட்சி பெற உதவியுள்ளது. எந்த மண்ணில் கம்யூனிசப் பிரகடனம் 1848 இல் செய்யப்பட்டதோ அதே மண்ணிலிருந்து தொழிலாளர் சக்தி மீண்டெழுமா என்கிற எதிர்பார்ப்பை இந்த ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத் தேர்தல் ஏற்படுத்தியுள்ளது. அதே வேளை பிரான்சிய ஜனாதிபதி மக்கரேன் அவர்கள் நேரடியாகவே பிரான்சை அதீத வலதுசாரி ஆட்சி முறையிலா அல்லது மத்திய வலுதுசாரி ஆட்சி முறையிலா என்பதை மக்கள் தங்கள் வாக்குகள் மூலம்சட்டவாக்கசபைத்தேர்தலில்வெளிப்படுத்தி பிரான்சின் எதிர்கால அரசியல் நிர்ணயத்தை பிரான்சிய மக்களே உறுதிப்படுத்துமாறு தான் இந்தத் தேர்தலை அறிவித்தாகக் கூறியுள்ளார். இன்று பிரான்சிய சட்டவாக்கசபைத் தேர்தல் பிரான்சின் அரசியல் எதிர்காலத்தைப் பிரான்சின் குடிமக்கள் தங்கள் வாக்கினால் முடிவுசெய்யும் அரசியல் செல்நெறிக்கான குடியொப்பமாக முக்கியத்துவம் அடைந்துள்ளது.

யேர்மனியில் மத்திய இடதுசாரி அதிபர் ஒலவ் ஸ்கொல்ஸ் *(Center-left Chancellor Olaf Scholz)*அவர்களின் கூட்டணி ஐரோப்பிய ஒன்றியத் தேர்தலில் 14 வீத வாக்குகளைப் பெற்று வாக்கு வீழ்ச்சி பெற கிறிஸ்தவ ஜனநாயக் கட்சி ஒன்றியம் *(Christian Democratic Union)* 30 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது. யேர்மனியின் அதீத வலதுசாரிக்கட்சியும் *[ Far-right Alternative for Germany (AfD)]* தனது வாக்குப்பலத்தில் அதிகரிப்பைக் காட்டியுள்ளமை கிறிஸ்தவ சனநாயகம் முன்னணி வகுத்த நிலை மாறி மீளவும் யேர்மனியத் தேசியம் எழுச்சி பெறுவதை வெளிக்காட்டியுள்ளது. அதே வேளை பசுமைக்கட்சிகளின் புத்தாக்கத் தளமாகத் திகழ்ந்த யேர்மனியில் பசுமைக்கட்சிக்கான வாக்கு வீழ்ச்சியும் அதீத வலதுசாரித்தன்மை ஐரோப்பிய அரசியல் செல்நெறியாக மீளவும் இரண்டாம் உலகப்போர்க் காலத்தைப் போல வளர்ச்சி பெறுவதை வெளிப்படுத்தியுள்ளது.

ஹங்கேரியின் பிரதமர் *(Viktor Orbán)* பிடாஸ் கட்சி *(The Fidesz)* 43 வீதமான வாக்குகளை எதிர்பார்த்த நிலையில் 10வீதம் குறைவாகப் பெற இக்கட்சியில் இருந்து கடந்த பெப்ருவரியில் பிரிந்;து பீட்டர் மக்ஜார் *(Péter Magyar)* தொடங்கிய மதித்தல் மற்றும் சுதந்திரத்துக்கான கட்சி *[Respect and Freedom party (TISZA)]* 31 வீத வாக்குகளுடன் வளர்ச்சி கண்டதை அடுத்து பீட்டர் மக்ஜார் இதனை விக்ர் ஓர்பினின் " வோட்டர் லூ *(Waterloo)* என வர்ணித்து நெப்போலியனின் சர்வாதிகார ஆட்சி வாட்டர்லூவில் வீழ்ச்சியுற்றது போல பிரதமர் விக்ர் ஓர்பினின் பிடாஸ்கட்சிக்கும் வீழ்ச்சி தொடங்கி விட்டது எனக் கூறியுள்ளார். நேட்டோ பாதுகாப்பை போலந்து முன்னிலைப்படுத்தி முன்னர் போல ரஸ்ய மேலாண்மை மீளாதவாறு போலந்தில் ஏற்பட்டு வரும் தேசிய விழிப்புணர்வாக இது அமைகிறது.

இத்தாலியில் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி *(Giorgia Meloni)* அவர்களின் இத்தாலியின் சகோதரர்கள்கட்சி *(Brothers of Itly)* வீத வாக்குகளையும் மத்திய வலதுசாரிகள் 25 வீத வாக்குகளையும் பெற இத்தாலியில் 2009 இல் தொடங்கப் பெற்ற 5 நட்சத்திர இயக்கம் *( The 5-Star Movement )* 10.5 வாக்குகளையே பெற்று தொடங்கிய காலத்தில் மிகக்குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளது. அதே வேளை இத்தாலியில் 50 வீதத்துக்குக் குறைவானவர்கள் வாக்களித்தமை பொதுமக்கள் கட்சி அரசியலிலும் பெரும்பான்மை சனநாயகத்திலும் நம்பிக்கையிழந்து வருவதை வெளிப்படுத்தியுள்ளது.

நெதர்லாந்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னாள் உதவித் தலைவர் பிரான்ஸ் டிம்மர்மான்ஸ் *(Frans Timmermans)* அவர்களின் தலைமையிலான இடதுசாரிகள் - பசுமைக் கூட்டுக் கட்சி *(Left-Green alliance)* 21 வீத வாக்குகளைப் பெற கியர்ட் வில்லர்சின் *(Geert Wilders)*அதீத வலதுசாரிக் கட்சி 17 வீத வாக்குகளைப் பெற்று ஐரோப்பாவில் எழுச்சியுறும் அதீத வலதுசாரித்தன்மையை உறுதி செய்துள்ளது.

போலந்தில் முன்னாள் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவரும் இன்றைய போலந்தின் பிரதமருமான டொனல்ட் டஸ்க் *(Donald Tusk)* சிவிலியன்களுக்குத் தளமாக அமைத்த அவரின் தாராண்மைவாத சனநாயக் காங்கிரஸ் அமைப்பு *(Liberal Democractic Congress)* 37 வீதமான வாக்குகளையும் அவருடைய எதிர்க்கட்சியான சட்டத்திற்கும் நீதிக்குமான கட்சியினர் *(Law and Justice party)* 35 வீத வாக்குகளையும் பெற்று ஐரோப்பாவில் தனிப்பெரும்பான்மை பலமின்றி எல்லா நாடுகளிலும் மக்கள் பன்முகத்தன்மையான அரசியலைமுன்னெடுப்பதைஉறுதிசெய்துள்ளனர். போலந்து சனநாயகத்தில் வெற்றி பெற்றுள்ளது எனவும் ஐரோப்பாவுக்கு ஒளியாகி நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது எனவும் போலந்தின் பிரதமர் டொனல்ட் டஸ்க் கூறியுள்ளார்.

இன்று ஆங்கிலத்தை விட அதிக அளவில் சுமார் 400 மில்லியன் மக்கள் பேசும் மொழியாக ஸ்பாணிஸ் திகழ்ந்து 21 நாடுகளில் முக்கியத்துவம் பெற்ற நிலையில் ஸ்பெயின் ஐரோப்பிய ஒன்றியத்தின் மிக முக்கிய நாடாகவுள்ளது. ஸ்பெயினில் பழமைவாத மக்கள் கட்சியினர் *[Conservative People's party (PP)]* புதிய வரலாற்றுச் சுழற்சி எனக் கூடிய வகையில் 34.2 வீதமான வாக்குகளையும் 22 ஆசனங்களையும் பெற்று இவ்வளவு காலமும் ஸ்பானிய அரசியலில் செல்வாக்குச் செலுத்தி ஆட்சிப்படுத்திய ஸ்பானிய சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சியினரை *( Spanish Socialist Workers party (PSOE)* 30.2 வீதமான வாக்குகளையும் 20 ஆசனங்களையும் பெற வைத்துள்ளனர். அதீத வலதுசாரிக் கட்சியான வொக்ஸ் கட்சி *(Far-right Vox party)* 9.6 வீதமான வாக்குகளையும்,6ஆசனங்களையம்பெற்றமையும், 2019 இல் தொடங்கப் பெற்று 2 ஆசனங்களை வென்ற மற்றொரு அதீத வலுதுசாரிக் கட்சி சி அக்கபோ லா பியஸ்டா *[ Far-right faction - Se Acabó la Fiesta (The Party's Over)]* 3 ஆசனங்களாக வளர்ச்சி பெற்றமையும் இஸ்பெயினிலும் ஐரோப்பிய அதீத வலதுசாரி எழுச்சி தொடரும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும் இஸ்பெயினின் சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சியின் கூட்டணிக் கட்சிகளது ஆசனங்கள் ஆறிலிருந்து இரண்டாகக் குறைந்துள்ளமை கூட்டு மொத்தத்தில் ஸ்பானிய இடதுசாரிக்கட்சிகளின் வீழ்ச்சியை உறுதி செய்கின்றன. மேலும் அகோரா ரீப்பப்ளிக்காஸ் *(Ahora Repúblicas)* எனப்படும் ஸ்பெயினில் தன்னாட்சிக்காகப் போராடி வரும் கட்டலோனியா மற்றும் பாஸ்க் தேசமக்களை உள்ளடக்கிய *(Catalonia and the Basque Country)* கூட்டணி மூன்று ஆசனங்களை வென்றுள்ளமை இந்த மக்களின் தன்னாட்சிக் கோரிக்கைக்கான பலமாகவும் வெளிப்பட்டுள்ளது. ஆயினும் ஒற்றுமை இயக்கம் எனப்பொருள்படும் எல்லோரும் ஒன்றுபட்ட ஸ்பெயினை மீள்கட்டியெழுப்பத் தங்களைத் தேர்தல் கூட்டணியாக முன்னிலைப்படுத்திய சுமர் *(Sumar)* என்னும் அமைப்பினர் ஐரோப்பிய வாதம் பழமைவாதம் என்பன மீள்எழுச்சி பெறுவதைத் தொடர்ந்து தங்கள் துணைப்பிரதமர் பதவிகளிலிருந்து விலகிக் கொண்டனர்.

### முடிவுரை

**இக்கட்டுரையின் வழி ஐரோப்பிய மக்கள் ஐரோப்பியத் தேசியத்தின் மீளுருவாக்கம் தங்கள் நாடுகளின் பாதுகாப்புக்கு முக்கியமானது என்பதைத் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் முடிவுகளால் வெளிப்படுத்தி உள்ளதை ஈழத்தமிழர்கள் முன்னுதாரணமாகக் கொண்டு ஈழத்தமிழ்த் தேசியத்தை மீளுருவாக்கம் செய்யத் தக்க வகையில் தாயகத்திலும் புலத்திலும் தங்கள் வாக்குப்பலத்தைப் பயன்படுத்தி தங்களின் இறைமையின் அடிப்படையில் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வைப் பெற உண்மையுடனும் நேர்மையுடனும் அர்ப்பணிப்புக்களுடனும் கட்சி மற்றும் குழுநிலைப் பேதங்களைக் கடந்து பொதுவெளியில் ஒன்றிணைந்து இறைமையை இழக்க விடாத அரசியல் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் 1977ம் ஆண்டிக் ஈழத்தமிழ் மக்களின் குடியொப்பத்தின் ஆணையினை சனநாயகவழிகளிலான பங்களிப்புக்கள் மூலம் நனவாக்கும் வகையில் பொதுக்கொள்கையினைக் கட்டமைத்து உழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையை எழுதியதன் பயனாக எதிர்பார்க்கப்படுகிறது.**

• • •

### ரணிலின்... தொடர்ச்சி ...

இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு நாடாளுமன்றம் நிச்சயமாக ஆதரவளிக்கும்.

நாடாளுமன்றத்தில் இப்போது அதிக ஆசனங்களைக் கொண்டிருப்பது மொட்டுக் கட்சி. அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நாடாளு மன்றம் வரும் வாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகம்தான். அதனால், மேலும் ஒரு வருடம் பதவியை நீடிக்க அவர்கள் விரும்பலாம். இந்த அரசியலமைப்பு சர்ச்சையின் முடிவு என்ன என்பது இன்னும் இரண்டு வாரங்களில் தெரியவரும்.

• • •

### மக்களின் வாழ் ... தொடர்ச்சி ...

தளங்களை சேர்த்து உடைக்க முற்படுகிறார்கள் வாழ்வாதாரத்தை நம்பி செயற்படும் எங்களை வன்முறையை தூண்டியதாக பொய்யான குற்றச் சாட்டுக்களை முன்வைத்து கைது செய்தார்கள்" பல்வேறு இக்கட்டான சூழ் நிலையில் வாழும் மக்களை அச்சுறுத்தி செயற்படுவதும் வாழ்வாதாரத்தை அழிப்பதும் மக்கள் மீது திணிக்கும் துஷ்பிரயோகமாக உள்ளது. அப்பாவி மக்களுக்கான வாழ்வாதாரத்தை அமைத்துக் கொடுப்பதும் அவர்களை பொருளாதார ரீதியான முன்னேற்றங்களை கொண்டு சேர்ப்பதும் அரசாங் கம் மீதுள்ள கடமையாகும்.

மூதூர் நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கின் பின் ஊடகங்களுக்கு மக்கள் இவ்வாறு கருத்து தெரிவித்தனர்

இந்த மலையை உடைப்பதால் பல்வேறு இன்னல்களை மக்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்படும் எங்களது வாழ்வாதாரம் இங்கு தான் உள்ளது விவசாயச் செய்கை கால் நடை வளர்ப்பு போன்றன இதன் மூலம் பாதிக்கப்படலாம் .அரசாங்கம் மக்களுக்காக தான் இருக்கிறது மக்கள் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றனர்.

எனவே மக்களுக்காக பல விடயங்களை சாதகமான நிலமைகளை உருவாக்க உரிய அரச உயரதிகாரிகள் முன்வர வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.